
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

**Translated from BS 892**

**Jan-Feb 2016**

**பொருளடக்கம்**


சட்ட வாக்கியம் (2016) ................ 2

சகோதர சிநேகம்.... ................ 9

# சட்ட வாக்கியம் (2016)

*Motto Text - 2016*

***"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்: உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது: சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது." எரே. 15 : 16.***

**யு**த்தத்தில் மரணமடைந்த யோசியா ராஜா (2 நாளா.35 : 22-24), சிங்காசனத்தில் தனக்கு அடுத்த வாரிசைக் குறித்து எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லை; எனவே ஜனங்களின் மூப்பர்கள் ராஜாவின் இளைய மகனை யூதாவின் ராஜாவாயிருக்கும்படி தேர்ந்தெடுத்தார்கள். எகிப்தின் ராஜா, அசீரியாவுடன் போரிட்டு, வெற்றியோடு திரும்புகையில், யூதேயா ராஜ்யத்தின் மீது தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்த ராஜாவை சிறைபிடித்து எகிப்துக்கு கொண்டு போனான்; அவனுடைய மூத்த சகோதரனாகிய யோயாக்கீமை சிங்காசனத்தில் உயர்த்தினான். அவனோ முற்றிலும் துணிகரமான, கேடுள்ள மனுஷனாக இருந்தான். (2 நாளா. 36 : 1-5). ராஜ்யத்தில் அவனுடைய வழிகாட்டுதலின்கீழ், தீமையின் எல்லா காரியங்களும் செழித்தோங்கியது. அவனுடைய தகப்பனால் ஆரம்பிக்கப்பட்ட நல்ல சீர்திருத்தங்கள் விலக்கப்பட்டு புதிய விக்கிரக வழிபாடு (உருவ வழிபாடு) ஏற்படுத்தப்பட்டது.

இந்தக் காரியம், எரேமியா தீர்க்கதரிசி, தேசத்தில் பிரதான தீர்க்கதரிசிகளில் ஒருவராக இருந்த காலத்தில், அவர் வெளிப்படையாக தீர்க்கதரிசனம் உரைப்பதிலிருந்து சில காலம் தடைசெய்யப்பட்டிருந்தபோது நடந்தது; ஆனால் கர்த்தருடைய வழிகாட்டுதலின் கீழ், யூத ஜனத்தின்மீது வந்து கொண்டிருந்த நியாயத்தீர்ப்புகள் மற்றும் சிட்சைகள் பற்றிய தமது தீர்க்கதரிசனங்களை எழுதினார். தனக்கு உதவியாளராயிருந்த பாருக்கு மூலம் அதை எழுதினார். அது எழுதப்பட்டவுடனே எருசலேமில் ஜனங்களில் முக்கியமான ஒரு சிலருக்கு முன்பாக பாருக்கால் அது வாசிக்கப்பட்டது, அது ஆழமாக அவர்களுடைய மனதில் பதிந்தது. அதனால் அந்த காரியம் ராஜாவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். அந்த ராஜா அந்த தீர்க்கதரிசனத்தினிமித்தம் கோபம் கொண்டு, அவர்களுக்கு தீங்கு செய்யத் தேடாதபடிக்கு அவர்கள் தீர்க்கதரிசி மற்றும் அதை எழுதியவருடன் (சம்பிரிதி) தங்களுக்குரிய சிநேகத்தைக் காட்டும் விதமாக அவர்கள் ஒளிந்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை ஆலோசனையாகக் கூறினார்கள். (எரே. 36 : 2-20). யோயாக்கீம் ராஜா எரேமியாவின் தீர்க்கதரிசனம் குறித்து தனக்கு அளிக்கப்பட்ட பொதுவான அறிக்கையைக் குறித்து திருப்தி அடையாததால், அந்த அறிக்கையைத் தான் பார்க்கும்படி கொண்டுவந்து, தன்னுடைய சொந்த எழுத்தர் தனக்கு முன்பாக அதை வாசிக்கும்படி கேட்டுக் கொண்டான். அந்த செய்தியால் ராஜா கவலைப்படாமல், அந்த கையெழுத்துப் பிரதியிலிருந்து, பத்திகளை வாசிக்கக் கேட்டபின்பு, அவன் தன்னுடைய எழுத்தரின் சூரிக்கத்தியால் அவற்றை அறுத்து தனக்கு முன்பாக இருந்த அக்கினியில் போட்டான், அவன் இப்படியாக மீதமுள்ளவற்றையும் அப்படியே மொத்த சுருளும் வாசிக்கப்படும்வரைக்கும் அவன் தொடர்ந்து அப்படியே செய்து அதை அழித்துப்போட்டான். (வச. 21-23). அவன் தேவனிடமிருந்து எந்த ஆலோசனையையும் பெற்றுக் கொள்ளாமலிருக்க தீர்மானித்திருந்ததை முக்கியப்படுத்தவும், அல்லது அவன் தேவனிடத்தில் தனக்கு விசுவாசம் இல்லாதிருந்ததையும், அவருடைய வார்த்தையை அவன் மதிக்காததையும் சுட்டிக் காட்டுவதற்காகவும் அப்படிச் செய்தான் என்று நாம் சொல்லலாம்.

ராஜா எரேமியாவையும், அவனுடைய (சம்பிரிதியையும்) எழுத்தரையும் கைது செய்யும்படிக்கு கட்டளையிட்டான். ஆனால் தேவனுடைய பரிபாலனத்துக்கு இசைவாக அவர்கள் ஏற்கனவே மறைந்து கொண்டிருந்ததால், அவர்கள் கண்டுபிடிக்கப் படவில்லை. (வச. 26). அவர்கள் மறைந்து தனிமையில் இருக்கும்போது, தாங்கள் தயாரித்த கையெழுத்து சுருள் அழிக்கப்பட்டதை அறிந்து, தீர்க்கதரிசனத்தின் மற்றொரு உரையையும் தயாரித்தனர், அதில் இன்னும் சில கூடுதலானவைகளும் சேர்த்து எழுதப்பட்டது என்று





**COURTESY BY :**


THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Leon Snyder. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*



நமது தோட்டக்காரரான தேவன் தமது வசனத்தினால் உன்னுடைய ஜீவியத்தை இயற்கை அழகுடைய இரட்சிப்பின் தோட்டமாக ஆக்க எளிமையான தாழ்மையுடன் அர்ப்பணம் செய்.

நமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது, (வச. 32). இதுவே எரேமியாவின் புஸ்தகமாக நம்முடைய வேதாகமங்களில் காணப்படுகிறது. இது தேவனுடைய மேற்பார்வையின் கீழாக வேதாகமமானது பகுதி பகுதியாகச் சேர்க்கப்பட்ட முறையை நமக்கு சிறிய அளவில் காண்பிக்கிறது. ராஜாவுக்கு அளிக்கப்பட்ட முதலாவது சுருள் சந்தேகமின்றி மிகவும் குறிப்பாக, அவர் வாழ்ந்த காலத்தையும், நிகழ்வுகளையும் குறித்துக் காட்டுவதாக இருந்தது. அது தன் நோக்கத்தை நிறைவேற்றியது, அதன்பின்பு பெரிதும், முழுமையான புத்தகமுமான எரேமியாவின் தீர்க்கதரிசன புத்தகம், நம்மிடம் இப்போது இருக்கிறபடியே, உருவாக்கப்பட்டது - முக்கியமாக, அந்த காலத்துக்குரிய ஜனங்களுக்காக அல்ல, ஆனால் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகிறபடி, சுவிசேஷ சபையின் புத்திமதிக்காகவும், பக்திவிருத்திக்காகவும் (ரோம. 15 : 4; 1 பேது. 1 : 12) கொடுக்கப்பட்டது. எரேமியாவின் நாளுக்கும், யோயாக்கீமுக்கும், பாபிலோனிய ராஜாவுக்கும் பொருந்துவதாயிருந்த காரியங்கள் இரண்டு மடங்கு முக்கியத்துவத்துடன் அக்காலத்திலிருந்த மாம்ச இஸ்ரயேலுக்கும், சொல்லர்த்தமான பாபிலோனுக்கும் பொருந்துவது மட்டுமல்லாது, ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கும், சுவிசேஷ யுகத்தின் இரகசிய பாபிலோனுக்கும் பொருந்துவதாக இருக்கிறது.

**“அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்”** (ஏசா. 55 : 11) என்று தேவன் அறிவிக்கிறார். நாம் இதை முன்பு நிகழ்ந்த சரித்திரத்தில் தேவனுடைய திட்டங்களை அந்த ராஜாவால் தோல்வியுறச் செய்ய முடியவில்லை என்பதைக் காண்பதோடு அவருடைய வார்த்தையை நமக்குக் கொடுப்பது தொடர்பான பல்வேறான தேவனுடைய பரிபாலனங்கள் எல்லாவற்றிலும் கூட நாம் அதைப் பார்க்கிறோம். பல நூற்றாண்டுகளாக அந்த வார்த்தையின் பெரும்பாலானவை தேவனுடைய ஜனங்களுக்கு இருட்டாகவும், அர்த்தமற்றதாகவும் தோன்றியது, ஆனால் ஆயிர வருட யுக நாளின் விடியலின் வெளிச்சத்தில் அது பிரகாசிக்கிறது. பழங்காலத்திலுள்ள ஒவ்வொரு



சாந்தகுணம் கோழைத்தனமல்ல அது கட்டுப்படுத்தப்பட்ட உறுதியான மனவலிமை.

சிறிய குறிப்பும் தீர்க்கதரிசனங்கள் மற்றும் விவரமும் ஒரே மாதிரியான, அதே மிகப்பெரிய மதிப்பும் மிகப்பெரிய புத்திமதியும் கொண்டதாயிருக்கும் என்று நாம் கருத வேண்டியதில்லை. இதற்காக நாம் கண்டுபிடிக்க வேண்டியது இல்லை. சத்திய முத்துக்கள் இங்கே கொஞ்சமும், அங்கே கொஞ்சமுமாக, வசனம் எங்கும் சிதறிக்கிடக்கின்றன, மேலும், இந்த வகையில்தான், தேவன் தம்முடைய திட்டத்தின் அழகிய குறிப்புகளை மேலோட்டமாக வாசிப்பவரிடமிருந்து மறைத்து வைத்திருக்கிறார் என்றும் நாம் அறிந்திருக்கிறோம்.

பழைய ஏற்பாடு தீர்க்கதரிசனங்களிலிருந்து, ஒரு சிறிய பகுதி மட்டுமே புதிய ஏற்பாட்டில் இங்கேயும் அங்கேயுமாக மேற்கோள் காட்டி உபயோகப்படுத்தப் பட்டிருப்பதை சந்தேகமின்றி நாம் எல்லாரும் கவனித்திருக்கிறோம். ஆனால் அடிக்கடி சூழ்நிலைப் பொருத்தம் மேற்கோள் காட்டப்பட்ட பகுதியுடன் மிகவும் பொருத்தமற்றதாகக் காணப்படுவதை நாம் அனைவரும் சந்தேகமின்றி கவனித்திருக்கிறோம். அதனால்தான் தற்காலத்தில், பழைய ஏற்பாட்டை தம்முடைய ஊழியக்காரர்கள் மூலமாகக் கர்த்தருடைய ஆவி தம்முடைய ஜனங்களுக்கு முன்பாக அதிகமதிகமாக திறந்து காட்டுவதால், நாம் அதில் அதிசயமான காரியங்களைக் காண்கிறோம். ஒவ்வொரு சிறிய காரியத்தையும், ஒவ்வொரு அத்தியாயத்தின் ஒவ்வொரு வசனமும், சரிசமமாக, அர்த்தங்களும், ஆவிக்குரிய சத்துள்ளதாக ஆகாரமும் நிரம்பியிருப்பதாக நாம் காண்பதில்லை. அதில் குறிப்பிடத்தக்க பகுதி நம்முடைய ஆவிக்குரிய சத்துள்ள ஆகாரத்துக்கு ஏற்றதும், அதைப் போலவே தகுதியானதுமாக இரா-தென்றும் நாம் எதிர்பார்க்கலாம். இருந்தபோதிலும் காலத்துக்கு ஏற்ற ஆகாரத்தை கொடுப்பதற்கும் அதையே சரியான பொருத்தத்துடன் கொடுப்பதற்கும் அவசியமாயிருக்கிறது. ஆம், **“உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்.”**

நாம் தானியத்தை வைத்திருந்தாலுங்கூட, நம்முடைய போஷாக்கான ஆகாரமாக அது தயாராக்கப்படுவதற்கு முன்பு அரைத்தல் அல்லது இடித்தல் போன்ற சில ஆயத்தங்கள் அதற்கு தேவைப்படுவதை நாம் ஞாபகத்தில் வைப்போமாக. எனவே நம்முடைய காலத்துக்குப் பொருத்தமான ஆவிக்குரிய காரியங்களான கோதுமை மற்றும், பிற தானியங்களை நாம் கண்டுபிடித்த பிறகும்கூட, நமக்கு பரிசுத்த ஆவியின் ஒத்தாசையும், காலத்துக்கு ஏற்ற ஆகாரத்தை அரைக்கவும், ஆயத்தமாக்கவும் கர்த்தர் பயன்படுத்திய (கையாட்களின்) செயல்கருவிகளின் ஒத்தாசையும் இன்னும் தேவைப்படுகிறது. எந்த வகையில் இது ஏற்படுத்தப்பட்டாலும், இது அவசியமான தேவனுடைய பரிபாலனத்திற்குரியதாகும். மேலும் பல்வேறு கருவிகளாக பயன்படுத்தப்பட்ட - நமது கர்த்தர், அப்போஸ்தலர்கள் மற்றும் பலரின் கீழ் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் (தேவனுடைய



**பயபக்தியும் சத்தியமும் கைகோர்த்து செல்கின்றன.**

பரிபாலனங்கள்) எல்லாவற்றுக்காகவும் நாம் தேவனுக்கு நன்றிகளையும், துதிகளையும், உண்மையுணர்ந்து போற்றுதல்களையும் தெரிவிக்க வேண்டும்.

இறுதியாக யோயாக்கீம் தேவனுக்கு எதிராக போர் புரிவது வீணென்று கண்டுகொண்டான்; எரேமியாவின் வார்த்தைகளை அவன் எரித்தது அவருடைய தீர்க்கதரிசனத்தை அழிக்கவும் செல்லுபடியாகாதபடியும் செய்ய முடியவில்லை. அவ்வாறே மற்றவர்கள் யாவரும் இந்நாள்வரை இக்காரியத்தை கண்டுகொள்கிறார்கள். சரித்திரம் காட்டுகிறபடி, மற்றவர்கள் மத்தியில் ரோமன்கத்தோலிக்கர்கள் தேவனுடைய வசனமான, வேதாகமத்துக்கு எதிராக இருந்து வருகிறார்கள், மேலும் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி குறிப்பிடத்தக்க அளவு வேதாகம எரிப்புகள் நடத்தப்பட்டிருக்கின்றன. சரித்திரம் நமக்கு சொல்கிறபடி, புதிய ஏற்பாட்டின் டின்டேல் (Tyndale) மொழிபெயர்ப்பின் முதலாவது பதிப்பு, லண்டனிலிருந்த புத்தக விற்பனை நிலையங்கலிலிருந்து கொண்டுவரப்பட்டு எரிக்கப்பட்டது என சரித்திரம் நமக்குக் கூறுகிறது. அறியாமை, மூடப்பழக்கம் மற்றும் எல்லா தவறான செயல்களுக்கும் வலிமையான எதிரியாக வேதாகமம் வைக்கப்பட்டிருப்பதால், அநேகர் அந்த புத்தகத்தை வெறுப்பது ஆச்சரியமல்ல.

சிலர் வேதாகமத்தை வெறும் மூடநம்பிக்கையோடு வணங்குகிற பொருளாகவும், மந்திர ஆற்றல் கொண்ட அதிர்ஷ்டத்திற்கான ஒரு புத்தகமாகவும் மாத்திரம் நினைத்துப் பற்றிக் கொண்டு, அதனை தங்கள் வீடுகளில் காட்சிக்கு வைக்க விரும்புகிறார்கள். அது இல்லாமல் வீட்டில் அவர்கள் முழுமையான பாதுகாப்பில் இருப்பதாக எண்ண முடியாது; அதனை அவர்கள் தேவனுடைய வார்த்தையாக மதிக்கிறார்கள், ஆனால் அதனைத் தாங்களாகவும் புரிந்து கொள்வதில்லை, அதனை மற்றவர்கள் புரிந்து கொள்ளக்கூடும் என்பதையும் அவர்கள் நம்புவதுமில்லை. அவர்கள் வேதாகமத்தை எரிப்பதோ அல்லது வேறு விதத்தில் அழிப்பதோ இல்லை, ஆனால் தேவனுடைய வார்த்தையிலிருந்து அறியாமையாகிய தூசியையும், புகையையும், இருண்ட யுகங்களின் மூட நம்பிக்கைகளையும் நீக்கி அதன் மெய்யான வெளிச்சத்தையும், அழகையும் பிரகாசிக்கச் செய்கிற வேறெந்த புத்தகத்தையும் எரிப்பதிலும் அல்லது அழிப்பதிலும், முழு ஒத்துணர்வோடு இருக்கிறார்கள். அவர்கள் இவைகளை எரிக்கவோ அல்லது வேறு விதமாக அழிக்கவோ தயங்கமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் உள்ளுணர்வில், அப்படியாக தேவனுடைய வார்த்தை பிரகாசிப்பது அந்த அளவுக்கு அவர்களுடைய சபை சம்பந்தமான பூமிக்குரிய அமைப்புகளின் பகட்டை அழிப்பதாக எண்ணுகிறார்கள். சில விஷயங்களில் அப்படியாக எரித்துப் போடுவது பொது ஜனங்கள் முன்பாக நடத்தப்பட்டு வருகிறது; அநேக சான்று நிகழ்வுகளில் இந்த வகுப்பிலுள்ள ஜனங்களின் அறிவுரைப்படி, கர்த்தருடைய செம்மறி ஆடுகளில் பயந்த சுபாவமுள்ளவர்கள் தங்கள் புத்தகங்களை இரகசியமாக எரித்துவிட்டார்கள் அல்லது வேறுவிதமாக அழித்துவிட்டார்கள். வேதாகம கன்வென்ஷன் ஒன்றில் இந்த சாட்சியை ஒரு சகோதரியிடமிருந்து நாங்கள் பெற்றோம். "கர்த்தர் தம்முடைய பரிபாலனத்தினால், அநேக ஆண்டுகளுக்கு முன்பு "யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு"-புத்தகத்தை எனக்கு அனுப்பி வைத்தார். ஆனால் நான் என்னுடைய மத குருக்கள் மற்றும், சரியான கிறிஸ்தவ வழிகாட்டிகள் என்று நான் மனதில் எண்ணியிருந்தவர்களின் சத்தத்திற்கு செவிகொடுத்ததுடன், அந்த புத்தகத்தை எரித்தும்விட்டேன். இருந்தும், என்னிடம் இரக்கம் கொண்ட கர்த்தர், எனக்கு இன்னொரு பிரதியை அனுப்பினார்: மீண்டும் நான் இருளின் சத்தங்களுக்கு செவி கொடுத்து அந்த புத்தகத்தையும் எரித்துவிட்டேன். கர்த்தரோ மிகுந்த இரக்கத்துடன் புத்தகத்தின் மூன்றாவது பிரதியையும் எனக்கு அனுப்பி வைத்தார். இம்முறை நான் அதற்கு ஆயத்தமாக இருந்தேன் - அது என்னை எரித்துவிட்டது! அது என்னை விடுவித்தது; நான் தேவனுடைய தயவிலும், அவருடைய வசனத்தின் மீதுள்ள வெளிச்சத்திலும் களிகூருகிறேன்." அவள் அருகிலிருந்த அவளுடைய கணவர் பேசுகையில் "ஆமாம், அது என்னையும்கூட எரித்துவிட்டது-" என்று கூறினார். அது பழைய சுய சித்தத்தையும் மற்றும் மதப் பிரிவையும், வழி, சத்தியம் ஜீவனுக்கு எதிராயிருப்பதையும் எரித்துப் போட்டது; அதை தேவன் தாமே தம்முடைய வார்த்தை மூலமாக வெளிப்படுத்தியிருக்கிறார்; அதற்கு இயேசுவும் அவருடைய மீட்பின் வேலையும் திறவு கோலாக இருக்கின்றன.

அருமை நண்பர்களே, நாம் தெய்வீக திட்டத்தை நம்முடைய பலவீனமான எதிர்ப்புகளால் திசை திருப்ப முடியாது என்பதையும், நாம் அவ்வாறு செய்ய விரும்பினாலுங்கூட முடியாது என்பதையும் அதிகமதிகமாக உணர்ந்து கொள்வோமாக, மேலும், நாம் தேவனுடன் அப்படிப்பட்ட இருதய இசைவை பெற்றவர்களாக, அவரிடத்தில் அப்படிப்பட்ட விசுவாசத்தை பயிற்சி செய்வோமாக, அதனால் அவருடையதற்குப் பதிலாக நாம் சுயமாக அவருக்காக ஒரு திட்டத்தை போடுவதும் அல்லது அந்த கிருபையான



சத்தியத்திற்கான பசி உலகளாவிய மனித விருப்பமாயிருக்கிறது அது உண்மையைப் பரிசோதிக்கும் வல்லமையைக் கொடுக்கிறது.



**பரிசுத்தம் என்பது ஒரு உணர்வு அல்ல அது கீழ்ப்படிதலின் முடிவான பலன். தூய்மை ஒரு வெகுமதியல்ல அது மனந்திரும்புதல் மற்றும் மனப்பூர்வமாக தேவனைப் பின்பற்றுவதால் உருவாகும் விளைபலன்.**

*திட்டத்தை எந்த வகையிலாவது, திருத்தி அமைத்து, மாற்றி அல்லது திருத்தம் செய்யும் எதுவும் நம்முடைய எண்ணங்களில் இருந்து தூரமாயிருப்பதாக. சரியான வகையில் பார்த்தால், அது தெய்வீக அன்பு மற்றும் ஞானத்தின் நீளங்கள், அகலங்கள் உயரங்கள் மற்றும் ஆழங்களை உள்ளடக்கியுள்ளது. நாம் தேவனுக்கு எதிராகப் போராடாமல் இருப்போமாக, மேலும் அதனால் நாம் நித்திய ஜீவனை இழக்காவிட்டாலும் நசுக்கப்பட்டு ஸ்தானத்தை இழந்து, வருத்தப்படாதிருப்போமாக. நாம் தேவனுடைய வார்த்தையை, நேரடியாக எதிர்ப்பதின் மூலமாகவோ அல்லது அதன் உண்மையானதும் இசைவானதுமான ஞானத்தை எதிர்ப்பதின் மூலமாகவோ அதனை, அழிக்க நாடாதிருப்போமாக. அதற்கு மாறாக, வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருக்கிற அனைவருக்கும் வருகிற மகத்தான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோமாக. அதை அவர்கள் நன்மையும் உண்மையுமான இருதயங்களில் ஏற்றுக் கொண்டு அதில் சந்தோஷமாயிருக்கிறார்கள்.*

*உலகின் சிறந்த மற்றும் உயர்ந்த உத்தம குணமுடையவர்களில் அநேகர், எல்லா புத்தகங்களிலும் மிகச் சிறந்த புஸ்தகமான தேவனுடைய புஸ்தகத்தின் மேன்மையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தங்களை பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவர்களாக அறிவிக்காத லிங்கன் மற்றும் கிராண்ட் போன்ற ஜனாதிபதிகள்கூட அதன் மேன்மையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அனுபவிக்கப்படும், சுதந்திரங்களுக்கு மூலைக்கல்லாக வேதாகமத்தை தான் மதிப்பதாக ஜெனரல் கிராண்ட் அறிவித்தார். "இந்த புத்தகத்தில் உள்ளதையெல்லாம் உன்னால் முடிந்த அளவு பகுத்தறிவின் மீதும் மீதமிருப்பதை விசுவாசத்தின்மீதும் எடுத்துக்கொள், அப்போது நீ ஒரு சிறந்த மனுஷனாக ஜீவித்து மரிப்பாய்" என்று ஜனாதிபதி லிங்கன் (Lincoln) கூறினார். "எல்லா புத்தகங்களும் ஒன்றாக வைக்கப் பட்டாலும் அதைக்காட்டிலும், வேதாகம வசனங்கள் என்னையும் அதிகமான ஆழத்தில் என்னுடைய ஜீவனைக் கண்டுகொள்கின்றன" என்று கோல்ரிட்ஜ் (Colridge) சொன்னார். "என் வாழ்வில் என்னவெல்லாம் நான் செய்திருக்கிறேனோ அவைகளுக்கெல்லாம் உண்மையான காரணமாயிருப்பது, நான் குழந்தை யாயிருந்தபோது, என் தாயார் தினந்தோறும் வேதாகமத்தின் ஒரு பகுதியை என்னுடன் தினமும் வாசித்ததோடு, தினமும் அதில் ஒரு பகுதியை என்னை மனப்பாடம் செய்ய வைத்ததுதான் என்று ஜான் ரஸ்கின் (John Ruskin) கூறினார். காண முடியாத கடவுளை நம்ப முடியாது என்ற கொள்கையுடைய ஹக்ஸ்லே (Huxley) என்ற விஞ்ஞானி "வேதாகமம், தரித்திரர் மற்றும் துன்பப் படுகிறவர்களின் மேக்னா கார்ட்டாவாக இருக்கிறது" என்று அறிவித்தார். "வாழ்வின் நெருக்கடி, பிரச்சனை மற்றும் குழப்பம், எப்படிப்பட்டதாயிருந்தாலும் இந்த தீர்ந்துபோகாத பொக்கிஷ களஞ்சியத்திலிருந்து அதன் தேவைக்கு ஏற்ற உதவி செய்யாதது அல்லது உதவி செய்ய முடியாதது எது? என்று கிளாட்ஸ்டோன் (Glad stone) சொன்னார்; "நாம் அந்த வேதாகமத்தை சரியாகப் படித்தோமானால், இந்த உலகத்தில் உள்ள காரியங்களைச் சிறந்ததாக ஆக்கும்படி முயற்சிக்க நமக்குப் போதிக்கிற ஒரு புஸ்தகத்தையே நாம் படிக்கிறோம்" என்று தியோடர் ரூஸ்வெல்ட் (Theodore Roosevelt) சொன்னார்.*

*இந்த சாட்சியங்கள் உள்ளிலிருந்து வருவதற்கு மாறாக வெளியிலிருந்தே வந்திருக்கின்றன. முக்கிய மாக உண்மையான யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாட்டை மிகச் சிறிதளவே புரிந்து கொண்டவர் களிடமிருந்தே இப்படிப்பட்ட சாட்சியங்கள் நம்மிடத்தில் வருகின்றன. நாம் படிப்படியாக, வேதாகமத்தில் அடங்கியுள்ள மகிமையானதும், ஆச்சரியமுமான ஜீவ வசனங்களின் மதிப்பை சரியாக உணர்ந்து கொள்ளுதலுக்கும், அதிலுள்ள மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களின் உண்மையான அர்த்தத்திற்கும் வந்திருக்கிறோம். அவைகளின் மூலமாக கர்த்தருடைய திட்டத்தில், அவருடைய ஒரே மெய்யான சபை பூமியின் மீதுள்ள ஜாதிகளையெல்லாம் முடிவில் ஆசீர்வதிக்கும்படியாக கர்த்தருடைய கருவிகளாயிருக்கும்படி ஆயத்தம் செய்யும்படி (ஆதி. 12 : 3; 22 : 16-18) திட்டமிடப்பட்டிருக்கிறது. அதனால் நம்முடைய இருதயங்களில் வேதாகமத்தின் மதிப்பைப் பற்றிய சாட்சி எவ்வளவு ஆழமும் அதிக அர்த்தமும் உள்ளதாக இருக்க வேண்டும். உண்மையில், இந்த நேரத்தில் நம்முடைய பாடத்தின் வார்த்தைகள் யாருக்காக எழுதப்பட்டிருக்கின்றன என்று நாம் கேட்க வேண்டும்.* **"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே, அவைகளை உட்கொண்டேன், உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும் என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது. சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப் பட்டிருக்கிறது."** *தேவன் தம்முடைய ரகசியங்களை எல்லாரிடமும் வெளிப்படுத்துவதில்லை. ஆனால் சில குறிப்பிட்ட பண்புகளை இருதயத்திலும், மனதிலும் உடையவர்களுக்கு மட்டும் வெளிப்படுத்துகிறார். அதற்கு விசேஷமாக ஏழு பண்புகள் தேவைப்படுகிறது.*

## வளர்ச்சியடைவதற்கு இருதயம் மற்றும் மனதில் இருக்க வேண்டிய ஏழு பண்புகள்

*(1) மனத்தாழ்மை தேவை, ஏனெனில் அதனால் ஒருவன் சரியான தாழ்மையுள்ள, சுயமதிப்பீடு உள்ளவனாக இருப்பதுடன், தன்னுடைய குறைகளையும், தனக்கு தேவன், கிறிஸ்து மற்றும் வேதாகமம் மற்றும் அதன் போதனைகளின் தேவையையும் உணர்கிறான்.*

*(2) சாந்தகுணம் தேவை, ஏனெனில் அது மனதிற்கு கற்றுக்கொள்ளும் தன்மையையும், இருதயத்தில்*

பணிவையும் கொடுக்கிறது; அது ஒருவரை, தகுந்த போதனைகளை ஏற்றுக்கொள்ள திறந்த மனமும், ஒத்துணர்வும் உள்ளவனாக்குகிறது.

*(3) பயபக்தி தேவை, ஏனெனில் அதனிமித்தம் தேவன் ஒருவனுக்கு சத்தியத்தை வெகுமதியாகக் கொடுக் -கிறார். அது இல்லாமல் ஒன்றும் இல்லை.*

*(4) பசி-சத்தியத்துக்காகவும், நீதிக்காகவும் அவை களுக்காகக் கொண்டிருக்கும் பலமான விருப்பமானது அவைகளுக்காக ஒருவனுடைய அன்பை பலமுள்ள தாக்கி, சத்தியத்தை அடைகிற வழியிலுள்ள தடைகளை மேற்கொள்ளச் செய்வதற்கு அவசிய-மாயிருக்கிறது. மெய்யாகவே பசியுடன் இருப்ப-வர்கள் ஆகாரத்திற்காக ஆவலோடு தேடுவார்கள், மேலும் மனப்பூர்வமாக(பசிதீர) புசிப்பார்கள். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிற அநேக-ருடைய பிரச்சனை அவர்கள் ஜீவ அப்பத்திற்காக உண்மையான பசியுடனிருப்பதில்லை; ஜாக்கிரதை யாக வேதவாக்கியங்களை ஆராய்ந்து சத்தியத்தைத் தேடவும், அதன்பின்பு மனப்பூர்வமாக அதில் பங்கு கொள்ளவும் போதுமான பசியுடன் அவர்கள் இல்லை.*

*(5) பரிசுத்தம் - பொதுவான மற்றும் சாதாரணமானவர் களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, சத்தியம் மற்றும் நீதிக்கு அர்ப்பணித்தலும்கூட அவசியமாயிருக்கிறது.*

*(6) உண்மை (நேர்மை) - இருதயம் மற்றும் மனதில் இது, சத்தியத்தை உண்மை என்று ஏற்றுக்கொள்ள தேவைப்படுகிறது, ஏனெனில் உண்மையில்லாத இருதயம் இயல்பாகவே சத்தியத்துக்கு எதிராக மோதுகிறது, அதே சமயம் நேர்மையான இருதயம் சத்தியத்துக்கான விருப்பம் கொண்டிருக்கிறது.*

*(7) நன்மையான இருதயம் தேவைப்படுகிறது, ஏனெனில், ஒரே மாதிரியாயிருப்பவை ஒன்றையொன்று ஈர்ப்பது போல, நற்குணத்தின் ஒரு வெளிப்பாடாக சத்தியம் இருப்பதினால் ஒரு நல்ல இருதயம் இயல்பாகவே அதனை உணர்ந்து பாராட்டுகிறது.*

*மனத்தாழ்மை:* **"அந்தச் சமயத்திலே இயேசு சொன்னது: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்"** *(மத். 11 : 25); சாந்தகுணம்: சாந்த குணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்த குணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார் (சங். 25 : 9); பயபக்தி:* **"கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது, அவர்களுக்கு தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்"** *(சங். 25 : 14); நீதியின்மேல் பசிதாகம்:* **"நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள்."** *(மத். 5 : 6). பரிசுத்தம்:* **"யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே."** *(எபி. 12 : 14). உண்மையும் நன்மையுமான இருதயம்:* **"நல்ல நிலத்தில் விதைக்கப் பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மை-யுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்-கிறவர்களாயிருக்கிறார்கள்."** *(லூக். 8 : 15).*



**ஒருமுறை பொய் சொல்வீர்க-ளானால் அது உங்கள் உண்மைகள் அனைத்தையும் கேள்விக்குறியாக்கிவிடும்.**

*ஒருவன் தன்னுடைய நாளின் காலத்துக்கேற்ற சத்தியத்தை அடைந்து கொள்ள இது ஏற்ற சமய-மாயிருப்பதால் அதனை தொடர்ந்து பெற்றுக் கொள்ள வேண்டுமானால் இப்படிப்பட்ட இருதயப் பண்புகள் அவனிடம் குறைந்தபட்சம் கொஞ்ச அளவிலாவது இருக்க வேண்டும். மேலும் அவன் சத்தியத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால் இந்த பண்புகள் அவனில் வளர்ச்சியடையவும், அதிகரிக்கவும் வேண்டும். ஜனங்களில் சிலர் தேவனுடைய வார்த்தை-யின் சத்தியத்தை ஒருசமயம் அறிந்து கொண்ட பின்பு அதனை இழந்துவிட்டதற்கான காரணம் இந்த இருதயப் பண்புகளை போதுமான அளவுக்கு அவர்கள் இழந்துவிட்டார்கள் என்பதே.*

**"அவைகளை உட்கொண்டேன்"** *என்ற வார்த்தைகள், வாசிப்பதைக் காட்டிலும் ஆராய்ந்து படிப்பது அதிக முக்கியம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது! சிலர் எப்போதெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்கிறதோ, அப்போதெல்லாம் படிக்கிறார்கள். மேலும், தங்கள் வாழ்நாளில் முடிந்தவரை அநேகம் முறைகள் அதனைத் தொடர்ந்து வாசிக்கிறார்கள், அதனால் அவர்கள் தேவனுடைய மேலான அங்கீகாரத்தைப் பெற்றிருப்ப தாக எண்ணுகிறார்கள். வேதாகமத்தை வாசிப்பதின் மூலமாக வேதாகமத்தின் பாடங்களையும், சரித்திரங்-களையும் நாம் நன்கு தெரிந்து கொள்ளலாம். இவ்விதத்தில் வேத வாசிப்பு மெச்சத்தகுந்ததே. அத்துடன் இந்த சரித்திரங்களிலிருந்து நம்முடைய அன்றாட ஜீவியங்களுக்கானப் பாடங்களைப் பெற்றுக் கொள்கிறோம்; அதன்படி தீமை சம்பந்தமாக அதாவது அதை வெறுத்தல், தவிர்த்தல் மற்றும் எதிர்த்தல், முதலான சரியான நிலையில் நிற்கவும் மற்றும் நன்மை சம்பந்தமாக அதாவது, அன்பாயிருத்தல், அதன் வளர்ச்சியை நம்மிலும், மற்றவர்களிலும் பயிற்சி செய்தல் மற்றும் ஊக்கப்படுத்துதல் முதலான சரியான நிலையில் நம்மை நிற்கக்கூடியவர்களாக்குகிறது. தீமைக்கு எதிராகவும், நன்மைக்காகவும், பயபக்திக்காக-வும், அப்படிப்பட்ட ஒரு நிலையை எடுக்க நமக்கு உதவுவதற்கு, சங்கீதங்கள் மற்றும் நீதிமொழிகள் போன்ற புஸ்தகங்களை வாசிப்பது நமக்கு நன்மை-யாயிருக்கிறது.*

*யாத். 16 : 14 சொல்கிறது,* **"பெய்திருந்த பனி நீங்கினபின், இதோ வனாந்தரத்தின் மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின் மேல் கிடந்தது:**

*வச.15* **இஸ்ரவேல் புத்திரர் அதைக்கண்டு அது இன்னது என்று அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து இது என்ன என்றார்கள். அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக் கொடுத்த அப்பம்."** *நாம் மன்னாவைப் பற்றிய ஆழமான போதனைகளை அறிய அதை ஆராய்வோமாக.*

*இஸ்ரயேலர்கள் 'மன்னா சம்பந்தமாகச் செய்தவைகள்', நிறைவேறுதலான இஸ்ரயேலர்கள் தனிப்பட்ட விதத்திலும், சகோதர ஐக்கியத்தில் உரையாடல் மற்றும் வேத பாட வகுப்பில் படிப்பதின் மூலமாகவும் கர்த்தருடைய வசனத்திற்கு கவனம் செலுத்துவதைக் குறித்துக் காட்டுகிறது. இஸ்ரயேலர்கள் 'மன்னாவைச் சேகரித்தது', ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் சத்தியத்தின் பொருளை அறிகிற அறிவை அடைந்து கொள்வதை அடையாளப்படுத்துகிறது. அவர்கள் அதை எந்திரங்களில் அரைப்பது அல்லது உரல்களில் இடிப்பது, நிறைவேறுதலான பரிசோதித்து பார்க்கிற முறைகளை அடையாளப்படுத்துகிறது; அதனால் அதைப் பகுதிகளாகப் பிரித்து, உட்பகுதிகளாகப் பிரித்து, அதன் உட்பகுதிகளை பகுதி பகுதியாக பிரிப்பது போன்றவை, அதன் முதன்மை நிலைப் பகுதிகளாக, அதாவது கோட்பாடுகள், கட்டளைகள், வாக்குத்தத்தங்கள், புத்தி மதிகள், தீர்க்கதரிசனங்கள், வரலாறுகள் மற்றும் அடையாளங்கள் ஆகியவைகளாகப் பிரித்து, மேலும் அதன் சிறு பாகங்களுக்குள்ளாக அதாவது, இந்த பொதுவான தலைப்புகள் அதன் கீழ்வரும் இந்த பாடங்கள் மற்றும் அந்தப்பாடங்கள் ஒவ்வொன்றிலும் அடங்கியிருப்பவற்றிற்கு ஏற்ப பிரிகிறது. உதாரணமாக, சத்தியப் பாடப் பொருளின் பொதுவான பிரிவுகளில் நாம் தேவனைப் பற்றிய பாடத்தை கோட்பாட்டின் உட்பிரிவாக எடுத்துக் கொள்ளலாம். தேவனைப் பற்றிய பாடத்தைப் பின்வரும் பகுதிகளாக இன்னும் பிரிக்கலாம். அவருடைய ஜீவித்திருத்தல், அவருடைய குணாம்சம் போதனைகள் மற்றும் அவருடைய கிரியைகள் போன்றவை இவைகளில் ஒவ்வொன்றையும் மீண்டும் அவைகளுக்குள்ளாக உட்பிரிவுகளாக பிரிக்கலாம். எடுத்துக்காட்டாக அவருடைய ஜீவித் திருத்தல், அதன் தன்மை, அதன் ஆற்றல்கள், அதன் குணப் பண்புகள் என பிரிக்கலாம், இவைகளில் ஒவ்வொன்றையும் மீண்டும் மீண்டும் அதற்குள்ளாக பிரிக்கலாம். இதே முறையானது வேறெந்த உபதேசத் திற்காவது அல்லது மேலே கொடுக்கப்பட்ட சத்திய கருத்துக்கள் பற்றிய முதன்மையான பிரிவுகளில் வேறெதற்காவது பொருந்தச் செய்யலாம். இஸ்ரயேலர் மன்னாவை சமைத்ததை, வேக வைத்தது என்று கூடச் சொல்லலாம். இது சத்தியத்தை நிரூபிக்கிற முறைகளை குறித்துக்காட்டுகிறது; அதாவது வேதாகமம், பகுத்தாராய்வு மற்றும் நிகழ்வு உண்மைகள் ஆகியவற் றிலிருந்து ஆதாரங்கள் மூலமாக, ஒருவர் தன்னுடைய திருப்திக்கு ஏற்றபடி இதனை உண்மையானதென நிரூபித்துக் காட்டுவதைக் குறித்துக்காட்டுகிறது. இஸ்ரயேலர்கள் மன்னாவாகிய அப்பங்களைச் சுட்டது, ஒருவருடைய குணாதிசய வளர்ச்சிக்கும், நடத்தை சீர்திருந்தவும் அவருக்காகவும், மற்றவர்களுக்காகவும் தனிப்பட்ட விதத்திலோ அல்லது குழுக்களிலோ, அதைப்போலவே உபதேசத்திலும், கடிந்து கொள்வதிலும் (2 தீமோ. 3 : 15, 17) ஒருவருடைய வளர்ச்சிக்காகவும், சத்தியத்தை இருதயத்தில் சொந்தமாக்கிக் கொண்டு, அத்துடன் பொருந்துவதற்காக இசைந்து போகுதலை அடையாளப்படுத்துகிறது. இந்த அப்பங்களை அவர்கள் சாப்பிட்டது, ஒருவன் கர்த்தருடைய வசனம், ஆவி மற்றும் கிரியையில் (வளர்ச்சியடைய) கர்த்தருடைய சத்தியத்தை அவ்விதமாக உரித்தாக்கிக் கொள்வதை அடையாளப் படுத்துகிறது.*



**பாடங்களினால் மனிதர்களை நன்மையான இருதயமுள்ளவர் களாக்குவது கடினம் ஆனால் முன்மாதிரி யினால் அப்படிச் செய்வது எளிது நன்மை சில நொடிகள் மாத்திரமே இருக்கும். பரிசுத்தமாயிருப்பது ஜீவியத்தை வரையறுக்கும்.**

*இஸ்ரயேலர்களுக்கு ஆகாரமாயிருந்த மன்னா அல்லது ஜீவாதாரம் அழியாமை உடையதல்ல; மேலும் அது தினந்தோறும் சேர்க்கப்பட வேண்டியதாயிருந்தது. சத்தியத்தைப் போலிருக்கிற மன்னாவுக்கு அதிகமான ஆயத்த வேலை தேவைப்பட்டது; பொறுக்கிச்சேர்த்தல், அரைத்தல் அல்லது உரலில் இடித்தல், வேக வைத்தல், மற்றும் அப்பமாகச் சுடுதல் போன்றவை. படிகமாக்கப் பட்ட இந்த மன்னா மணிகளின் சுவை புதுமையான இனிப்பாயிருக்கும். இது அப்படியே நீண்ட நேரத்துக்கு வைக்கப்படுகையில் கெட்டியாக உறைந்து தேனைப் போல மிகுந்த தித்திப்பாயிருக்கும்.* **"இஸ்ரவேல் வம்சத்தார் அதற்கு மன்னா என்று பேரிட்டார்கள். அது கொத்துமல்லி அளவாயும், வெண்மை நிறமாயும் இருந்தது. அதின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாயிருந்தது."** *(யாத். 16 : 31).*

*இந்த அப்பங்களின் சுவை புத்தம்புதிய எண்ணெயைப் போல இருந்தது. ஜனங்கள் ஓரளவு மணமும், சுவையும் கெட்ட பழைய ஒலிவ எண்ணெயை சுவைத்த பிறகு, புதிய எண்ணெயின் சுவை மிகவும் நன்றாக இருந்தது. இது தேவனுடைய நல் வசனத்தின் நேர்த்தியான சுவையைப் பற்றியக் கருத்தை சொல்கிறது. அதன் உண்மைத்தன்மை, இசைவிணக்கம், நியாயத்திற்கு உட்பட்டிருத்தல், அழகு, மேன்மை, தேவையை நிறைவு செய்யும் தன்மை மற்றும் பயிற்சி செய்வதில் மனம் மற்றும் இருதயம் இரண்டையுமே திருப்தி தன்மையின் நிறைவான அளவுக்குத்தக்கதாக மனதிற்கும், இருதயத்திற்கும் மிகவும் நன்றாக சுவையளிக்கிறது; ஓ, எவ்வளவாக அதன் "சுவை" பரிசுத்தாவியில் அறிவூட்டுகிறது, திருப்திப்படுத்துகிறது, களிகூறுகிறது மேலும் உயர்த்துகிறது! அதன் பரிசுத்தாவி (எண்ணெய்) நம்முடைய பரிசுத்தாவிக்கு மிகவும் நன்மையாயிருக்கும்படி அதனை சுவையுள்ளதாக்கு கிறது. இவ்வாறாகவே இது யோர்தானிலிருந்து இப்போது வரைக்கும் யுகம் முழுவதுமாக இருந்து வருவதுடன், எபிபெனி வேலை கடந்து போகிற*

வரைக்கும், எல்லா மெய்யான ஆவிக்குரிய இஸ்ரயேலர் களுக்கும் இது இருக்கும். எந்த சந்தர்ப்பங்களின் கீழ் மன்னா விழுந்தது? என்று நாம் கேட்க வேண்டும். இரவில் பனிபெய்யும் போது மன்னாவும் அதின்மேல் விழுந்தது. அது வனாந்திர பூமியின்மீது நேடியாக விழவில்லை, சந்தேகமின்றி, அது அதனை மண்ணும், சேறும் கலந்ததாக மாற்றியிருக்கும், ஆனால் அது தரையின் மீது பெய்திருந்த பனியின் மீது உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாகக் கிடந்தது.

இரவில் நீண்ட நேரமாகப் பெய்திருந்த பனியின் மீது கிடந்த மன்னா, தொடர்ந்தேர்ச்சியாக சத்தியம் வளர்ச்சியடைவதை தெரிவிக்கிறது. (நீதி. 4 : 18). ஒரு பாமாலையில் சொல்லப்பட்டுள்ள கருத்தை எப்போதும் நமக்கு நினைவுப்படுத்துகிறது. “**அது இன்னும் பின்பற்றுவதற்கு நிறைய இருக்கிறது**” என்று கூறுகிறது. இஸ்ரயேலரின் வனாந்திர பயணம் முழுவதுமாக மன்னா தொடர்ந்து பெய்ததின் மூலம் சொல்லப்படுகிற காரியம் யோர்தானிலிருந்து தற்போது வரையுள்ளது போல, ஏற்ற கால சத்தியமானது நிறைவேறுதலின் பாளயத்திலுள்ள தேவனுடைய ஜனங்கள் மீது ஏற்கனவே கொடுக்கப் பட்டிருந்த ஏற்றகால சத்தியத்தின் மீது வந்தது. முன்னேற்றமான சத்தியமானது சில வஞ்சகர்கள் போதிக்கிறபடி முன்பு பெறப்பட்ட சத்தியத்தை ஒதுக்கி வைத்துவிடவில்லை. பரோஷியாவின் போது சத்தியத்தின் இந்த விசித்திரத்தையும், அது காலத்திற்கு ஏற்றதாயிருப்பதையும் கவனித்துப் பார்த்தார்கள். அதாவது, தேவனுடைய ஜனங்களின் அவசியங்கள், சூழ்நிலைகள் மற்றும் அனுபவங்களின் தேவைக்கேற்ப அதன் வருகை, அதைப் போலவே எபிபெனியின் போதும், மேலும் இப்போதும் கவனித்துப் பார்க் கிறவர்கள், இது நடைமுறையின் ஒரு மெய்யான கோட்பாடாக இருக்கிறது என்பதை அறிந்து கொள்கிறார்கள்.

நம்முடைய பாட வசனமானது தேவனுடைய வார்த்தைகளை கற்றறியவும், உட்கொள்ளவும் (புசிக்கவும்) நம்மை வற்புறுத்துகிறது. மற்ற வேத வாக்கியங்களும்கூட வேதாகம பாடங்களைப் படிப்பதை அங்கீகரிப்பதுடன், தேவனுடைய ஜனங்கள்மீது அதனை கட்டளையாகக் கூறுகிறது. “**மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்: வெளிப்படுத்தப் பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படி– யெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும், நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்**” (உபா. 29 : 29); “**கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**” (சங். 1 : 2); “**வேதத்தையும், சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்: இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.**” (ஏசா. 8 : 20); “**தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும், நாம் நம்பிக்கையுள்ளவர் களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது.**” (ரோம. 15 : 4; 2 பேது. 3 : 2; வெளி. 1 : 3). ஆகையால் தேவனுடைய உண்மையான பிள்ளைகள் யாவரும், வேதாகமத்தைப் படித்தறிந்து கொள்ள வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறார்கள்;



“நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்.” நீதி. 4 : 18.

ஆனால் எல்லாரும் அதனை மிகச் சிறப்பாக படிக்க வேண்டிய முறையை ஒப்புக்கொள்ளவதில்லை. எந்த முறையானது நமக்கு மிகவும் பயனுள்ளதாயும், கர்த்தருக்கு மிகவும் பிரியமானதாயும் இருக்கிறது என்ற கேள்வி எழுகிறது.

தேவனுடைய ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதி ஸ்தாபிக்கப்பட்டு, பரிசுத்த பெரும்பாதை திறக்கப்பட்ட பின்பு, வேதாகமம் மிக தெளிவாக்கப்படும் என்பதால், அதன் வழியில் நடக்கிறவர்கள் பேதையராக இருந்–தாலும் திசைகெட்டுப் போகமாட்டார்கள் என்பது தேவனுடைய நோக்கமாயிருக்கிறது (ஏசா. 35 : 8; 11 : 9; எரே. 31 : 34). இந்த காலத்தில் அவருடைய திட்டத்தை விசேஷமாக அதன் ஆழமான அர்த்தத்தில், எல்லாரும் அறியும்படி வெளிப்படுத்துவது அவருடைய நோக்க–மல்ல. அவர் ஒரு நோக்கத்தோடுதான் தகுதியில்லாதவர்–களிடமிருந்து வேதாகமத்தின் அர்த்தத்தை மறைத் திருக்கிறார். மேலும் “**இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமாக**” அதன் இயல்பான அமைப்பு இருப்பதால், அதன் அர்த்தத்தை மறைக்க அது உதவுகிறது. இயேசு தகுதியற்றவர்களிடமிருந்து தமது வார்த்தைகளின் அர்த்தத்தை மறைக்கும்படி உவமைகளினால் பேசினார். “**இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார்: உவமைகளினாலேயன்றி அவர்களோடே பேசவில்லை. என் வாயை உவமைகளினால் திறப்பேன்: உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்க– தரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.**” (மத். 13 : 34, 35; மாற். 4 : 11, 12).

அங்கேயும் கர்த்தருடைய வசனத்திற்கு எதிராளிகள் தொடர்கிறார்கள். தேவ நம்பிக்கையில்லாத பெரிதான அல்லது சிறிதான கிறிஸ்தவமல்லாத மதங்கள் மற்றும் சில கிறிஸ்தவ மதங்களின் உதவியால் சத்தியம் பரப்பப்படுவதற்கு எதிராகவும் வேதாகம ஆராய்ச்சிக் காக கர்த்தர் அனுப்பிக்கொண்டிருக்கிற உதவிகளை, சாத்தானுடன் சேர்ந்து முழுப் பெலனோடு எதிர்த்து செயல்படுகிறார்கள். முடிவில் தேவனுடைய வார்த்–தையின் குறிக்கோளும், நோக்கமும் நிறைவேற்றப்படும் தெரிந்துகொள்ளப்பட்ட அனைவரும் அழைக்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டு ராஜ்யத்திற்காக ஆயத்தமாக்கப்–பட்டு, வாக்களிக்கப்பட்ட வேலையைச் செய்ய, பூமியின்வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்க அதற்குள் சேர்க்கப்படுவார்கள். “**அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்: அது வெறுமையாய் என்னிடத்திற்குத்**

**திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்."** *(ஏசா. 55 : 11).*



என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை; கேடு செய் – வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். ஏசா. 11 : 9

காலத்தின் சோதனையில் மற்றெல்லா புத்தகங்-களும் தோல்வியடைந்து போன நிலையிலும், வேதாகமம் நிலைத்து நின்றதை விளக்கும் விதமாக, நாம் கவனிக்க வேண்டிய உண்மை என்னவெனில், மற்ற புத்தகங்கள் குறிப்பிட்ட எந்த எதிர்ப்பையும் பெறவில்லை; அவற்றை அழிக்க எவ்வித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை; அப்படியிருப்பினும், அவை பார்வையிலிருந்து அகன்று மூழ்கிப் போய்விட்டன - அதே சமயம் வேதாகமமோ, பல நூற்றாண்டுகளாக அதற்கெதிராக கொண்டுவரப்-பட்ட எல்லா எதிர்ப்புகளுடனும் இக்காலத்தில் முன் எப்போதும் இராத வகையில் அதிக பரவலாக விநியோகிக்கப்படுகிறது. கிரேக்கு மற்றும் ரோம் நாட்டின் இலக்கியப் படைப்பு செல்வங்கள் எல்லா-வற்றின் மீதியான துணுக்குகள் மட்டுமே நூற்றாண்டு-களைக் கடந்து சென்றுள்ளன. அதே சமயம், சாலொமோன், தாவீது, மோசே, தீர்க்கதரிசிகள் மற்றும் வேதாகமத்தை எழுதியவர்களின் ஐசுவரியங்கள் தங்கள் ஸ்தானத்தை உறுதியாக நிலைநிறுத்தியிருக்கின்றன. ஓராயிர வருட காலம் பழமையான பண்டைய இலக்கியங்களின் கையெழுத்துப் பிரதி ஒன்றுகூட இல்லை. ஆனால், ஒராயிரவருட காலத்துக்குமேல் பழமையான கிரேக்க புதிய ஏற்பாட்டின் கையெழுத்துப் பிரதிகள் குறைந்தது ஐம்பதாவது இருக்கின்றன.

சுவிசேஷ யுகத்தின் இந்த விரிவாக்கப்பட்டுள்ள அறுவடை காலத்தில், சத்திய வசனத்தை ஆராய்ந்து படிப்பதில் நம்முடைய அனுபவங்கள், நம்முடைய அதிசயிக்கும் இருதயங்கள் அறிகிற தெய்வீக ஞானம், அன்பு மற்றும் வல்லமையின் புதிதான அழகிய குறிப்புகள் மற்றும் வளமான ஆழங்கள் ஆகியவை பிரெஞ்சு நாட்டின் மின்சார விஞ்ஞானி ஆம்பியரின் அனுபவங்கள் மூலமாக நன்கு விளக்கப்படுகின்றன. அவர் கிட்டப்பார்வை குறைபாடு உள்ளவராயிருந்தும், அதை அறியாதிருந்தார். ஒரு நண்பருடைய கண் கண்ணாடியை தற்செயலாகப் பயன்படுத்தியதின் மூலம் அவர் தன்னுடைய பார்வைக் குறைபாட்டை உணர்ந்தார். அப்போது, தன்னுடைய ஜீவிய காலம் முழுவதுமாக அவர் எந்த அளவுக்கு உலகத்தின் அதிசயமான அழகையெல்லாம் காணாமல் இழந்து விட்டதை உணர்ந்து கண்ணீர் விட்டு அழுதார்.

பூமியின் குடிகள் புதிய உடன்படிக்கையின் ஒழுங்குகளின் கீழ் வருவதால், சாபத்தின் காரணமாக மரித்துக் கொண்டிருத்தலும் மரித்தலும் நீக்கப் பட்டுவிடும். அப்போது தேவனுடைய அன்பும் வல்லமையும், முழு ஆற்றலுடன் மகிழ்ச்சி நிறைந்த சிருஷ்டிக்கு வெளிப்படுத்தப்படும். எடுத்துக்காட்டாக தெய்வீக வல்லமையின் தனிச் சிறப்பான வெளிப்படுத்-தல், பூமி முழுவதும் உள்ள பிரேதக் குழிகள் யாவும் தங்கள் மரித்தோரை ஒப்படைக்கும்போது காணப்படும். (எசே. 37; ஏசா. 38 : 18; ஓசியா 13 : 14). பூமியின் மீதிருக்கிற தீமையின் நிர்மூலமாக்குதல் ஆரம்பமாகும் (ஏசா. 25 : 6-9), இழந்து போனதைத் திரும்பக் கொடுக்கும் மிகப்பெரிய வேலை உலகெங்குமுள்ள தேசங்களில் செயல்படுத்தப்படும். எல்லோரும் - விருப்பமுள்ளவர்கள் சத்தியத்தைப் பற்றிய பூரணமும், திருத்தமுமான அறிவுக்கு கொண்டு வரப்படுவார்கள். (ஏசா. 11 : 9). ஆம் **"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்."**

***

# சகோதர சிநேகம் – ஒரு கடுமையான பரீட்சை

*Love of the brethren - A Crucial Test*

**"இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" சங். 133 : 1**

*சங். 133* நிச்சயமாகவே ஒரு தெளிவான தீர்க்கதரிசனமாயிருப்பதுடன், அது **"கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில்"** உள்ள சகோதரர்களைச் சுட்டிக்காட்டுவதாகத் தெரிகிறது. இந்த கருத்து இரண்டாவது வசனத்தில் குறித்துக்காட்டப்படுகிறது; **"அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் ஊற்றப்பட்டு இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்-கும்..... ஒப்பாயிருக்கிறது"** என்று அது கூறுகிறது. அது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின்மீது பரிசுத்தாவி இறங்கி வருகிற ஒரு சித்திர வர்ணனையாயிருக்கிறது.

இந்த சங்கீதமானது, நம்முடைய நாளுக்கும்கூட விசேஷமாக பொருந்தக்கூடியதாயிருக்கிறது. சகோதரர்கள் ஒருமித்துக் கூடி வாசம் பண்ணுகிறது பார்ப்பதற்கு எப்போதுமே மனதிற்கு உகந்ததாக இருந்து வருகிறது. துன்பங்கள் நிறைந்த காலங்களில் சகோதரர்களுக்குள் அதிகமாக மாபெரும் ஒற்றுமை (ஒருமித்தல்) காணப்படுகிறது. ஏனென்றால், வெளியிலிருந்து வரும் துன்பங்கள் எல்லோரையும் பின்வாங்கும்படிச் செய்து தடுத்து விடலாம். ஆனால் உண்மையாகவே பிரதிஷ்டை செய்தவர்கள் தேவனை உண்மையாக பின்பற்றுகிறவர்களோடு சேர்ந்து




"இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" சங். 133 : 1.

கொள்வதைத் தடுக்க முடியாது. அப்படிப்பட்ட துன்பங்கள் எல்லோராலும் பெரும்பாலும் உணரப்பட்டாலும், ஒரே மாதிரியான விருப்பமும் ஒரே மாதிரியான குறிக்கோளும் உடையவர்கள் மட்டுமே ஒன்றாகச் சேர்ந்து கொள்வார்கள்.

ஆனால் துன்பப்படுதல் முடிவடைந்து, அவ்வளவாக பக்திவைராக்கியம் இல்லாத அநேகர், தேவனுடைய உண்மையான ஜனங்களுக்கு மத்தியில், வந்து சேரும்போது வேறுபாடுகளுக்குக் காரணமான சந்தர்ப்பங்கள் அதிகரிக்கிறது. இந்நாளில் வெளிச்சத்தின் பிள்ளைகளுக்கு அதிகமாக எதிர்ப்புகள் இருந்தாலும் வெளிப்படையான துன்புறுத்தல்கள் சிறிதளவே உள்ளன. சத்தியமானது குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலுள்ளவர்களை கவர்ந்திருக்கிறது; அநேகமாக அவர்களில் சிலர் அவர்கள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கவில்லை. உண்மையாகவே, நம்மில் ஒருவர்கூட நாம் விரும்புகிற தேவனுடைய அருமை குமாரனுடைய சாயலின் பிரதியாக இருக்கவில்லை; இருந்தபோதிலும் ஒவ்வொருவரும், அந்த தரத்தை அடைய முயற்சி செய்கிறவர்களாயிருக்க வேண்டும்.


## சண்டைக்கான (பிரச்சனைக்கான) காரணங்கள் அதிகரித்தல்

தேவ தயவைப் பெற்ற பிள்ளைகள் மத்தியில் (உராய்வுகள்) சண்டை ஏதாவது இருக்குமா என்பது முதலில் விசித்திரமாகத் தோன்றலாம். அவர்களுடைய இருதயங்கள் முழுவதும் பரிசுத்த ஆவியால் நிறைந்திருக்கும். ஆதலால், அங்கே வெறுப்பு, பகை, சண்டை, பொறாமை போன்ற களைகளுக்கு இடமிருக்காது; அவைகள் ஆவியின் கனிகளால் நெருக்கப்பட்டு வெளித்தள்ளப்பட்டுவிட்டதாக ஒருவர் நினைக்கலாம். உண்மையில் நாம் முதன்முதலில் பிரதிஷ்டை செய்தபோது இதுவே நிலைமையாயிருந்தது, மேலும் அங்கே இப்படிப்பட்ட மாம்சத்தின் கிரியைகளுக்கு இடமில்லாதிருந்தது. ஆனால் சண்டைக்கான (எதிர்ப்புகளுக்கான) காரணங்கள் குறைவதற்கு பதிலாக அதிகமாகி வருவதாகத் தெரிகிறது. ஆகவே, நாம் பிரச்சனையின் மூல காரணத்தை கவனித்துப் பார்த்து அதனால் ஏற்படவிருக்கும் ஆபத்தை தடுத்து விலக்கி சகோதரர்கள் மத்தியில் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருப்பதே பொருத்தமானது. **"அன்றியும் பலமுள்ளவர்களாகிய நாம், .... பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும்."** *(ரோம. 15 : 1).* இந்த தரமானது அளவு முறையாயிருக்க வேண்டும் ஆனால், நாம் நம்பியிருக்கிறபடி அநேகர் பலமுள்ளவர்களாயிருக்கவில்லை; எனவே இது நாம் ஒவ்வொருவரும், பலமுள்ளவர்களாகி தேவனுடைய ஜனங்களுக்கு மத்தியில் உள்ள பலவீனமான சகோதரர்களுக்கு, உதவிகரமாயிருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறது.

உலகத்தார் அனைவரிடையே காணப்படுவதைக் காட்டிலும் ஆவியினால் நிறைந்திருப்பவர்கள் மத்தியில் சண்டைகள் (உராய்வுகள் - பிரச்சனைகள்) வருவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கிறது என்ற ஒரு காரியத்தைக் கவனிக்க வேண்டும். சத்தியத்தால் பூரண அறிவும் ஊக்கமும் பெற்றிருக்கிற ஒரு கூட்ட ஜனங்களைவிட பெயர்ச்சபையில் உள்ள ஒரு கூட்ட ஜனங்கள் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் சேர்ந்து ஜீவிப்பது எளிதாயிருக்கும் என்று சொல்லப்படுகிறது. இது முதலில் நிச்சயமாக நிகழ முடியாததாகத் தோன்றும், ஆனால் நாம் அதை ஆராய்ந்து பார்க்கையில் தெளிவாகத் தெரியும்.

பெயர்ச்சபையில், மதம் என்பது அதிக சம்பிரதாயமான காரியமாயிருக்கிறது. நன்கு உடையணிவதும், கூட்டங்களுக்கு செல்வதும், அமைதியாக அமர்ந்திருப்பதும், பின்பு வீட்டுக்கு திரும்புவதும் பெயர் கிறிஸ்தவர்களின் வழக்கமாயிருக்கிறது. மனவிருப்பமான காரியங்கள் உதாரணமாக, சூரியப்பிரகாசம், மலர்கள், நவநாகரீகமானவைகள் கவனிக்கப்படுகின்றன; அப்படியே அந்த நாள் கடந்துவிடுகிறது. ஆனால் அதிகமாக பிரகாசிப்பிக்கப்பட்டவர்கள் காரியத்தில் மனதிலும் எண்ணத்திலும் அதிகமான செயல்பாடு இருக்கிறது. மெய்யாகவே நாமும்கூட மலர்களையும் அதைப் போலவே நம்முடைய பரமபிதாவால் நமக்கு அளிக்கப்பட்ட எல்லாவற்றையும் பெற்று மகிழ்கிறோம். நாம் எதை விரும்புகிறோமோ, அதை விவாதிக்கிறோம், மேலும் விவாதிப்பதற்கான வாய்ப்பும் அதிகமாக இருக்கிறது; ஏனெனில் இரண்டு நபர்கள் தோற்றத்தில் ஒரே மாதிரியாக இராததுபோல, எந்த இரண்டு நபர்களும் ஒரே மாதிரியாக சிந்திப்பதில்லை.

கர்த்தருடைய ஜனங்களில் சிலர், தாங்கள் சுயமாக சிந்திப்பதாக பெருமைபாராட்டுகிறார்கள். ஆனால் சுயமாக விசுவாசிப்பதுதான் நமக்கு சிறந்த ஞானமுள்ள நடத்தையாயிருக்கும். சில காரியங்கள் அனுமானங்களேயல்லாமல், அறிவு பூர்வமானதல்ல. நாம் தேவனால் போதிக்கப்படுகிறோம். அவர் அப்படியே நமக்குச்




சொல்கிறார். அவருடைய வார்த்தையும் அப்படியே சொல்கிறது. ஆகவே, நமக்கு முன்வைக்கப்படும் காரியங்கள், கர்த்தரிடத்திலிருந்து வருகிறதாக, ஏற்றுக்கொள்வோமானால், கூடுதலான விவாதமின்றி நம்மால் அப்படியே நடந்து கொள்ள முடியும். நிச்சயமாகவே தேவனுடைய வார்த்தையிலுள்ள போதனைகள் பற்றி தத்துவம் பேசுவது நமக்குப் பிரியமாகத்தான் இருக்கும். கர்த்தர் நமக்குச் சொல்லியிருப்பதை விசுவாசிப்பதே நம்முடைய கடமையாகும். என்ன தத்துவம் பேசினாலும், அவை தேவனுடைய வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டும், அதற்கு இசைவாகவும் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். நாம் தத்துவம் பேசும்போது, மற்றவர்களும்கூட தத்துவம் பேசுவார்கள் என்பதை நினைவுகூருவோமானால், அப்போது உபதேசத்தில் பிரச்சனை எங்கே வருகிறது என்பதை நாம் காண முடியும்.

## தேவனுடைய வார்த்தையை பற்றிக் கொண்டிருப்பது வாக்குவாதத்தைத் தவிர்க்கும்

இந்த வித்தியாசமான உபதேச காரியங்கள் வேத வாக்கியங்களில் இருந்து பெறப்படுகின்றன. ஆனால் எழுதப்பட்டிராத காரியங்களைப்பற்றி நாம் விவாதிக்கத் தொடங்கின உடனே, அங்கே சண்டைக்கான ஆபத்து ஏற்படுகிறது. தேவனுடைய வார்த்தையை மிகவும் நெருக்கமாக பற்றிக் கொண்டிருக்கும் எவனும் தனக்குமட்டும் நன்மை செய்வது மட்டுமின்றி மற்ற சகோதரர்களுடனும், அவர்களுடைய தத்துவங்களுடனும் கருத்து வேறுபாட்டை தவிர்க்கக்கூடியவனாகவும் இருப்பான். சில குறிப்பிட்ட காரியங்கள் பற்றிய சில பிரதிபலிப்புகள் நம்மிடம் இருப்பதற்காக கர்த்தர் நம்மீது வெறுப்பு கொள்வார் என்று நாங்கள் எண்ணவில்லை. இருப்பினும்கூட நாம் ஒரு கருத்தை உடையவர்களாயிருந்து, அதை சகோதரர்களிடம் அறிவிப்போமானால், அது அவர்களுக்கு ஏற்கத்தக்கதாக தோன்றவில்லையென்றால், நாம் அதை அவர்கள் மீது திணிக்கக்கூடாது. அவர்களும் அவர்களுடைய கருத்துக்களை நம்மீது திணிக்கக்கூடாது. அப்படிப்பட்ட காரியங்களில், ஒவ்வொரு கருத்தையும் முடிவுக்கு கொண்டுவரவும் எல்லோரையும் நம்மோடுகூட ஒத்துக்கொள்ளச் செய்ய வேண்டும் என போராடக்கூடிய மனச்சார்பு இருப்பதால், கஷ்டம் தோன்றுகிறது. ஆகையால், திருப்தியுடன், அந்த காரியத்தை அப்படியே அமைதியாக விட்டுவிடுவதே சரியானதாயிருக்கிறது.

ஒவ்வொரு சகோதரனும் தன்னுடைய சொந்த கருத்துக்கு உரிமை உள்ளவனாயிருக்கிறான். நம்முடைய சொந்த கருத்துக்களை பரீட்சைகளாக உண்டு பண்ணுவதற்கு நமக்கு உரிமை இல்லை. எந்த காரியங்கள் பரீட்சையாக இருக்கின்றனவோ அவைகளே நமக்கு வேத வாக்கியங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக நாம் விசுவாசிக்க வேண்டியவை - இயேசு கிறிஸ்துவே, அபிஷேகம் பண்ணப்பட்டவர் மற்றும் உலக இரட்சகர் என்றும்; சபையார் யாவரும் அவருடன் உடன் சுதந்தரராயிருந்து அவருடைய சுதந்திரத்தில் பங்கடைகிறார்கள் என்றும்; அவர்கள் கிரையத்துக்கு வாங்கப்பட்டிருக்கிறார்கள் என்றும்; அப்படியே நாமும்கூட இக்காலத்தின் பாடுகளிலும் அதைத் தொடர்ந்து வருகிற ராஜ்யத்திலும் பங்கடைகிறோம் என்றும் நாம் விசுவாசிக்க வேண்டும். இதுவே நமக்கும், நமது சகோதரர்களோடுள்ள நமது நிலைப்பாட்டிற்கு மான பரீட்சையாகும்.

அப்படிப்பட்ட தெளிவான வேத வாக்கியங்கள் நம்முடைய நம்பிக்கையின் அடித்தளமாயிருக்க வேண்டுமே தவிர, மற்றவர்களால் அவைகள் மீது புகுத்தப்படுகிற கற்பனையான பொருள் விளக்கமாயிருக்கக் கூடாது. சிலர் மிகவும் பொதுவான விவரக் குறிப்புகளைப் பார்க்கிறார்கள்; சிலர் விளக்கங்களைப் பார்க்கிறார்கள், ஆனால், பொதுவான விவரக் குறிப்புகளை பார்க்கத் தவறி விடுகின்றனர். மனதின் பல்வேறுபட்ட பண்புகளைக் கொண்டிருப்பவர்களைப் பழிக்கவோ அல்லது போற்றவோ கூடாது. ஆயினும் அவர்கள் சத்தியத்திற்காக தேவனிடத்திலும், சத்திய சகோதரரிடத்திலும், பொதுவாக சத்தியத்தினிடத்திலும் உள்ள நம்முடைய உண்மைத்துவத்தினிமித்தம் பாடுபடுவதற்கு விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்ற சிந்தனையைப் பற்றிக் கொள்ள வேண்டும்.

## சத்தியமானது பலமான குணமுள்ளவர்களைக் கவருகிறது

ஒருமித்து வாசஞ் செய்வது மிகவும் கடினமாயிருப்பதாகக் காண்கிற இந்த சகோதரர்களுடைய உண்மையான உள்ளியல்பான தகுதி அல்லது குணாதிசயத்தின் காரணமாகவே இந்த பிரச்சனையின் ஒரு பாகமாக அவர்களுக்கு இருக்கிறது என்பதை நாம் நினைவுகூர வேண்டும். லப்பத்தூள் (புட்டிங் பவுடர்)




ஜனங்கள் தங்களுடைய புயலுக்குள் உன்னை இழுக்கவிடாதே. உன்னுடைய சமாதானத்துக்குள் அவர்களை இழுத்துக்கொள்.

போன்ற குணாம்சங்கள் கொண்ட சில ஜனங்கள் இருக்கிறார்கள்; ரப்பர் பந்தில் இருப்பதைப் போல தோன்றி உடன் மறையும் ஓர் நிலையில்லாத குழியை ஏற்படுத்தக்கூடிய ரப்பர் பந்தைப் போன்ற வேறு சிலரும் இருக்கிறார்கள். இன்னும் சிலர் வைரங்களைப் போலிருக்கிறார்கள். வைரத்தைப் போன்றிருக்கிற வகுப்பார் குணாம்சத்தின் உறுதியான ஒரு கட்டமைப்பை அடைந்திருக்கிறார்கள். நாம் ஒரு எண்ணிக்கையுள்ள லப்பத்தூள் உருண்டைகளையும், ரப்பர் பந்துகளையும் ஒரு எண்ணிக்கையுள்ள வைரங்களையும் ஒரு பாத்திரத்தில் போட்டு அவற்றை நன்கு குலுக்கினால் வைரங்கள் தம்முடன் நெருக்கமாய் வந்து தொடுகிற எல்லாவற்றையும் கீறிவிடும், ஏனெனில் அவை மிகவும் கடினமானவை. கர்த்தர் இப்போது ரப்பர் பந்து வகுப்பாரையோ, அல்லது லப்பத்தூள் வகுப்பாரையோ தேடிக் கொண்டிருக்கவில்லை. ஏற்ற காலத்தில் கர்த்தர் லப்பத்தூள் போன்ற ஜனங்கள் மற்றும் ரப்பர் போன்ற ஜனங்கள் ஆகிய எல்லா வகுப்பாருடனும் ஈடுபாடு செய்வார். ஆனால் சத்தியம் இப்போது ஆபரண அணிகலனாகும் (வைர) வகுப்பாரை மட்டுமே கவர்ந்திழுக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

கற்றுக் கொள்ளும்போது, ஒருவரையொருவர் இடறலடையச் செய்வதும், ஒருவரையெருவர் காயப்படுத்துகிற ஆபத்தும் இருப்பதால், அறிவானது நமக்கு ஞானத்தைக் கொடுக்கவேண்டும். இந்த சகோதரர்கள் உண்மையான குணாம்சங்களைப் பெற்றிருக்கிறார்கள்; அவர்கள் லப்பத்தூள் வகையைச் சேர்ந்தவர்களல்ல என்ற உண்மையை நாம் உணர்ந்து மதிக்க வேண்டும். அவர்களுடைய வேறுபாடுகளும்கூட குணாம்சத்தைக் காட்டுகின்றன. நாம் அந்த உண்மையை உணர்ந்து மதிக்க முயற்சி செய்வதுடன், அவர்களை எரிச்சல் அடையவிடாதபடி நம்மை பயிற்றுவித்துக் கொள்ளவும் வேண்டும். நாம் அவர்களுக்கு ஆலோசனை கூற வேண்டியவர்களாயிருக்கிறோம், அவர்கள் நம்மைப் போலவே கர்த்தருக்குப் பிரியமாயிருக்க வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறவர்கள் என்பதையும் நினைவுகூர வேண்டும். எனவே நாம், ஒருவருக்கொருவர் பொறுமையுள்ளவர்களாயிருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் உள்ள ஒரு வசனம், **"நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்"** (1 யோவா. 3 : 14) என்று அறிவிக்கிறது. சில சகோதரர்களிடத்தில் அன்பு கூருவது மிகவும் கடினமாயிருக்கும் என்று இது தெரிவிக்கிறது. நாம் மரணத்திலிருந்து ஜீவனுக்கு கடந்து செல்லாத பட்சத்தில், நாம் அவர்களிடத்தில் அன்புகூர முடியாதவர்களாயிருப்போம்.

சத்தியமானது பலவீனமானவர்களைவிட, பலமுள்ளவர்களிடமே உறுதியாக நிலைத்திருக்கும் என்று தெரிகிறது. எளிதில் வளைந்து போகக்கூடிய பண்பும் உறுதியற்ற அநேகரை விட, கர்த்தருக்குப் பிரியமானவர்களாகும்படியாக பலமுள்ளவர்கள் தங்கள் மாம்சத்தில் அதிகமான உறுதியும், மனோதிடமும், போராடும் குணமும் பெற்றிருக்கிறார்கள். நம்மை கர்த்தருக்குப் பிரியமானவர்களாக்குகிற அதே குணப் பண்பும், ஜெயங்கொள்ளுகிற நிலைக்குரிய அந்த ஒரே தகுதியும் உள்ளவர்கள்கூட எண்ணிக்கையுள்ள பிரதிஷ்டை செய்த விசுவாசிகள் ஒரு வகுப்பாராக ஒன்றுகூடி வரும்போது சில வகைகளில் ஆபத்தான சேதம் விளைவிக்கிறதாக இருக்கிறதை நாம் காண்கிறோம்.

வைரக்கல்லாயிருந்தாலும், அது களிமண்ணால் சூழப்பட்டிருந்தால் ஒன்றையும் வெட்டாது, ஒன்றையும் கீறாது; ஆனால் ஒரு டசன் (12) வைரக்கற்களை ஒன்றாக சேர்த்து வைக்கும்போது, களிமண்ணை அதிலிருந்து அதிகமாக அகற்றுவதற்கேற்ப, அதிக உரசல்களும், உரசி பளபளப்பாக்குதலும், தீட்டப்படுதலும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதைப்போலவே கர்த்தருடைய அணிகலன்களுக்கும் சம்பவிக்கிறது. அவர்கள் அதிகமாக ஒன்றுகூடி வரும்போது, அதிகமாக அவர்கள் விழிப்படைந்து அங்கே உராய்வுக்கான அதிகமான சந்தர்ப்பங்களும் ஏற்படும். எல்லாரும் பரிசுத்தாவியால் முழுவதுமாக நிறையப் படவும், மூடப்பட்டவர்களாயிருக்கவும் அதிகமான தேவை ஏற்படும். பரிசுத்தாவி, எண்ணெயைப் போலமிருதுவாகவும், குழைவாகவும் உராய்வைத் தடுப்பதாகவும் இருக்கிறது. அருமை சகோதரரே, நாம் ஒருமித்து வாசம் பண்ண நாடுவோமாக, மேலும், **"சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதை யாயிருந்து"** (எபே. 4 : 3) ஒருவரையொருவர் அனுசரித்து இருக்கவும், அன்பில் பெருகவும் நாடுவோமாக.


## அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கடவன். ரோம. 14 : 5

நேர்மையான மனங்கள் யாவும் ஒரு முடிவை தீர்மானிப்பதில், கூடுமானால், சத்தியம் சம்பந்தமான ஒவ்வொரு காரியத்திலும் அவ்வாறு செய்வதில் மகிழ்ச்சியடைகின்றன. பிரதிஷ்டை செய்துள்ள ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் தனக்கென்று-"தன் மனதில்" இதற்காக கடும் முயற்சி செய்ய வேண்டும் என்று அப்போஸ்தலன் அறிவிக்கிறார். தனிப்பட்ட ஒருவருக்கு நன்மையான இந்த விதியை ஒரு வேதாகம பாட வகுப்பிற்கு பொருந்தச் செய்ய முயற்சிப்பது தவறாகும்; அதாவது, கர்த்தருடைய வார்த்தையின் அர்த்தம் பற்றி கூறப்பட்ட அதே முடிவைத் தீர்மானிக்க எல்லோரையும் வற்புறுத்த முயற்சிப்பது ஒரு பொதுவான தவறாக இருக்கிறது. எல்லாரும் "ஒரே கண்கொண்டு பார்க்க" நாம் விரும்புவது சரியானதுதான்; ஆனால், எல்லாரும் சரீரத்தில் மட்டுமல்ல, மனதிலும்கூட பூரணத்திலிருந்து விழுந்துபோன நிலையில் இருப்பதால் இந்த விலகல்கள் யாவும் பல்வேறு பக்கங்களிலும் இருக்கின்றன என்பதை நாம் அறிந்திருக்கிறபோது, இதனை எதிர்பார்ப்பது நியாயமானதாயிராது. நம்முடைய பல்வேறு வகைகளும் மற்றும் கல்வித்தரங்களும்கூட ஒற்றுமையான நோக்கத்துக்கு ஆதரவாயிருப்பதில் அல்லது தடுப்பதில் முக்கிய காரணிகளாயிருக்கின்றன.

**ஒவ்வொரு நாளும் உங்களிடத்தில் நீங்கள் எதைச் சொல்வீர்களோ அதுவே உங்களை உயர்த்தும் அல்லது வீழ்த்தி அழிக்கும்.**

*நாமெல்லாரும் ஏக சிந்தையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று அப்போஸ்தலன் சொல்லவில்லையா? - மேலும் தெளிந்த புத்தியுள்ள ஆவியை நாமெல்லாரும் பெற்றிருக்கும்படி நாமெல்லாரும் தேவனால் போதிக்கப் பட்டிருக்கிறோம் அல்லவா? மேலும் அதினிமித்தம் நாம் கிருபையிலும், அறிவிலும் வளரவும், மகா பரிசுத்தமான விசுவாசத்தில் ஒருவரையொருவர் உறுதிப்படுத்திக் கொள்ளவும் எதிர்பார்க்க வேண்டுமல்லவா?*

*ஆம், இவையெல்லாம் உண்மைதான்; ஆனால் கலந்து கொள்ளும் ஒரே கூட்டத்தில் இவைகள் அனைத்தையும் அடைந்து கொள்ளக்கூடும் என்று குறிப்பிடப்படவில்லை. கர்த்தருடைய ஜனங்கள் அனுபவம் அல்லது கல்வியறிவு வேறுபாடுகளுடன் மட்டுமல்லாமல், கூடுதலாக வயது வித்தியாசத்துடன், குழந்தைகளாக, வாலிபர்களாக, முதிர்ச்சியடைந்தவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகையால், "**தேவனுடைய ஆழ்ந்த காரியங்களைச்**" சிலர் மற்றவர்களைக் காட்டிலும் மெதுவாக புரிந்து கொள்கிறவர்களாகவும், சிலவற்றை முழுமையாக தங்கள் மனங்களில் மெய்யென உணர்ந்து நம்புவதற்கு தாமதிப்பவர்களாகவும் இருந்தால் அது நம்மை ஆச்சரியப்படுத்தக்கூடாது. அவர்கள் அடிப்படையானவைகளை மனதில் பற்றிக் கொள்ள வேண்டும். அவை நாம் எல்லோரும் பாவிகளாயிருந்தோம். நம்முடைய தலைவரான கிறிஸ்து இயேசு கல்வாரியில் அவருடைய பலியை நிறைவேற்றியதால் நம்மை மீட்டுக் கொண்டார், அதனால் நாம் இப்பொழுது கிறிஸ்துவின் பாடசாலையில், கற்பிக்கப்பட்டு, ராஜ்யத்திற்கும், அதன் ஊழியத்திற்கும் தகுதிப்படுத்தப் படுகிறோம். மேலும் கர்த்தருக்கென்று அவர்களுடைய எல்லாவற்றையும் முழுமையாக பிரதிஷ்டை செய்தாலொழிய ஒருவரும் இந்த பாடசாலையில் பிரவேசிப்பதில்லை. எல்லாரும் இந்த காரியங்களைச் சரியாக கவனித்துப் பார்த்து, அவைகளுக்கு முழுமையாக உடன்பட வேண்டும், இல்லையென்றால், பூரண பிரதிஷ்டை செய்தவர்களும்கூட அவைகளை அறிந்துகொள்ள முடியாது; ஆனால் நாம் எல்லாரும் ஒருவரோடு ஒருவர் பொறுமையாயிருப்பது அவசியம். அத்துடன், ஒருவருக்கொருவர் தனிப்பட்ட தன்மைகளை நாம் பொறுத்துக் கொள்ள வேண்டும். மேலும் இவற்றுக்குப் பின்னால் அன்பு இருக்க வேண்டும், நாம் அதன் நிறைவை அதிகமதிகமாக பெற்றுக் கொள்ளும்போது ஆவியின் ஒவ்வொரு கிருபையும் பெருக வேண்டும்.*





ஒருவரும் நம்பாவிட்டாலும்கூட சத்தியம் சத்தியமாகவே இருக்கும். அனைவரும் நம்பினாலும்கூட ஒரு பொய்பொய்யாகவே இருக்கும்.

*இது இப்படி இருப்பதால், பல்வேறு நபர்கள் பங்கு பெறுகிற கூட்டங்களில் எல்லா கேள்விகளும், எல்லா விடைகளும், எல்லா குறிப்புகளும் அங்கே வந்திருக்கிற கூட்டத்தார் அனைவருக்குமே உரியதாக இருக்க வேண்டும். (பொதுவானதல்லாதது தனிப்பட்டவருக்கான அல்லது ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ளவர்களுக்கானதாக இருக்கக்கூடாது). கூட்டத்தலைவர் பேசுபவரின் வசதிக்காக அவரை, கூட்டத்தில் அமர்ந்திருப்பவர்களை நோக்கி நேரடியாகப் பேசும்படி கேட்டுக்கொண்டால் ஒழிய கூட்டத்திலுள்ள எல்லாரையும் குறித்துக்காட்டுகிற கூட்டத்தலைவரை நோக்கியே பேச வேண்டும். தன்னுடைய சொந்த கருத்தை வெளிப்படுத்திய பிறகு, ஒவ்வொருவரும் அமைதியாக மற்றவர்களின் கருத்துக்களைக் கேட்க வேண்டும், வாக்குவாதம் பண்ணவோ அல்லது அவர் ஏற்கனவே கூறிய கருத்தை மீண்டும்கூற அழைக்கப்பட்டதாகவோ நினைக்கக்கூடாது. தனக்கு கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, ஒவ்வொருவரும், சத்தியத்தில் வழிநடத்தப்படவும், போதிக்கப்படவும், மெய்ப்பித்துக் காட்டவும், கர்த்தரை நம்பியிருக்க வேண்டும், மேலும் எல்லோரும், ஒருவன் ஒரு விஷயத்தை பார்க்கிறது போலவே, எல்லாரும் பார்க்க வேண்டும் என்றோ அல்லது பெரும்பாலானவர்கள் அதைப் பார்க்கிறது போல பார்க்க வேண்டும் என்றோ வற்புறுத்தக்கூடாது. "முக்கியமானவைகளில் ஒற்றுமை; முக்கியமற்றவைகளில், அன்பு," என்பதே பின்பற்றப்பட வேண்டிய சரியான விதியாயிருக்கிறது.*

*ஆயினும், சத்தியத்தின் ஒவ்வொரு பாகமும் முக்கியமானது, மேலும் மிகச் சிறிய வகையான தப்பறையும் ஆபத்தானது என்பதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். அதனால் அறிவின் ஒருமைப்பாட்டுக்காக கர்த்தருடைய ஜனங்கள் ஜெபிக்கவும் உண்மையாக உழைக்கவும் வேண்டும்; ஆனால் இதனை பலாத்காரத்தின் மூலமாக அடைந்து கொள்ளலாம் என்று நாம் நம்பியிருக்கக்கூடாது. சத்தியத்தின் மூலக் கோட்பாடுகளில் முதன்மையானவற்றின் மீது ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வது முக்கியமானது. மேலும் இவை எங்கே விடாமல் கைக்கொள்ளப்படுகிறதோ அங்கே, இதைப் பெற்றிருக்கிற அனைவரையும் நம்முடைய கர்த்தர் ஏற்றகால சத்தியம் அனைத்திற்குள்ளும், மற்றும் அவனுக்குத் தேவையானவற்றுக்கும் வழிநடத்துவார் என்பதில் நாம் உறுதியான நம்பிக்கையுடனிருக்கலாம்.*

## கிளர்ச்சி செய்பவராக மாறுவதின் அபாயங்கள்

*எவ்வகையிலும் அதிருப்தியின் ஆவியில் தொடர்ந்து நிலைத்திருப்பது குணாம்சத்திலுள்ள ஒரு ஆபத்தான குற்றமாகக் (மோசமான குறைபாடாகக்) கருதப்பட வேண்டும். கர்த்தராகிய இயேசுவைப்*




**பரீட்சை (101)**

கஷ்டமான ஏதாவது வழியில் செல்லும்போது **தேவன்** எங்கேஇருக்கிறார் என்றுஆச்சரியபடுகிறாயா? பரீட்சை நடக்கும்போது ஆசிரியர் எப்போதும் அமைதியாகவே இருப்பார் என்பதை நினைவுகூர்.

கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிரு

*பின்பற்றுகிறவர்களாக தங்களைக் கருதிக்கொள்கிற எவருக்கும் அது முற்றிலும் தகுதியற்றதாயிருக்கிறது. இது தேவனுடைய நன்மையை தவறாகப் பயன் படுத்துகிற ஆபத்தான நிலையாகும். அதைப் பெற்றிருக்கிறவர்களின் நித்திய முடிவைக் குறித்து* **"என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லை"** *(எபி. 3 : 11) என்று எச்சரிக்கிறது.*

*மிகப்பெரிய கொழித்தல்களில் ஒன்றாக இருந்ததும், இன்னும் இருப்பதும் எதுவென்றால் முறுமுறுத்து முரண்பாடு கொள்தலாகும். அது, புத்தியை அருளும் பரிசுத்தாவியை தக்கவைத்துக் கொண்ட-வர்களுக்கும் அதனை இழந்துவிட்டவர்களுக்கும் இடையே ஓர் குறிப்பிடத்தக்க பிரிவினையைக் கொண்டுவருகிறது. சத்தமாகவோ (வெளிப்படை-யாகவோ) அல்லது மறைவாகவோ இருதயத்தின் எண்ணங்களில் முறுமுறுத்தல், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமானவரிடத்திலும், விசுவாசத்திலுள்ள நம்முடைய சகோதரர்களிடத்திலும் உள்ள நம்முடைய உறவுகள் அனைத்தும் சரியாக இல்லை என்பதை தவறில்லாமல் சுட்டிக்காட்டுகிறது. முறுமுறுத்தலுடன் எதிர்த்தல் சம்பந்தமானவைகள் என்ன? நம்மிடத்தில் உள்ளவைகளைப் பற்றியோ, அல்லது தேவன் அவருடைய வேலையில் நம்மை வைத்திருக்கும் நிலைமையைக் குறித்தோ நாம் அதிருப்தியுடனிருப்-போமானால், நம்முடைய தேவைகளுக்குத் தகுந்த அவருடைய ஏற்பாட்டிற்காக நாம் நன்றியுடனில்லை என்று நம்முடைய இருதயங்களை அறிந்திருக்கிற கர்த்தரிடம் நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம் என்பதாகும். அவருடைய நன்மையை நாம் சந்தேகிக்கி-றோமா? அவருடைய ஞானத்தை நாம் சந்தேகிக்கி-றோமா? வனாந்திரத்தில் அந்த சந்ததி அவருக்கு மனக்கசப்பாயிருந்தது போல, நாம் அவருக்கு மனக்கசப்பாயிருக்கிறோமா? இதை உணர்ந்து கொள்ளாமல், பரம பிதாவினால் அழைக்கப்பட்ட, விசுவாசமுள்ள பாத்திரங்களில் ஒருவருக்கு எதிரான நம்முடைய கிரியைகள் மூலம் நம்முடைய அன்பின் பரமபிதாவுக்கு வருத்தம் உண்டுபண்ணலாமா?*

*நிலையான ஒன்றைத் தொடர்ந்துவிடாமல் பிடித்து கொண்டிருக்கும் ஒரு நபர் வழக்கமாக அதைப் பற்றியே பேசுபவராய் இருந்தபோதிலும் மேல்மட்டத்திற்கு அடியில் கொந்தளித்துக் கொண்டிருக்கும் அதிருப்தியின் வகை மற்றவர்களால் உணரப்படுகிறது. அப்படிப்பட்ட மனநிலையில் அடிக்கடி குற்றஞ்சாட்டும் மூலப்பொருள் இருக்கிறது; அதைக் குறித்து சொல்வதானால், நீங்கள் ஏன் இவ்வளவாக தயவு பெற்றிருக்கிறீர்கள்? தேவன் உங்கள் மீது புன்னகைக்கிறார், ஆனால் ஏன் என்னைப் பாடு அனுபவிக்கச் செய்கிறார்? என்று கேட்பது போலிருக்கிறது. மற்றவர்கள், அவர்களுடைய சிறந்த நல்வாய்ப்பைப் பற்றியும், சந்தோஷத்தைப் பற்றியும் குற்றமாக எண்ணும்படியாக செய்கிறார்கள். அது அவர்களுக்கு வேதனையளிக்கிறது. அப்படிப் பட்டதொரு சூழல், குடும்ப ஒற்றுமையைப் பாழ்ப் படுத்தவும், நட்புகளை அழித்துவிடவும், கர்த்தருடைய ஜனங்களின் சபையில் ஆசீர்வாதமான கிறிஸ்தவ ஐக்கியத்தின் சமாதானத்தை குலைத்துவிடவும்கூடும். அதன் விளைவாக, வெகு சிலருடைய கொழித்தல் செயல்பாடுகளினால் அவர்கள் எல்லாரும் மன வேதனைக்குள்ளாக்கப்படுகிறார்கள்!*

*நமது இருதயத்தில் அதிருப்திக்கு இடங் கொடுப்பது நமக்கு மனக்கசப்பைக் கொண்டுவருகிறது. நம்முடைய குற்றச்சாட்டு சடத்துவ பொருட்கள் சம்பந்தப்பட்டதாயிருக்கலாம். நம்முடைய பிரதிஷ்டை-யில் பூமிக்குரிய நமது விருப்பங்களைப் பலியிடு-வதற்கும், நம்முடையவைகள் எல்லாவற்றையும் தேவனுடைய சித்தத்திற்கென்று கொடுப்பதற்கும் உண்மையுள்ளவர்களாயிருப்பதைப் பற்றி நாம் சோதிக்கப்படுகிறோமா என்று கேட்பது நம்முடைய கடமையாக இருக்கிறது. அல்லது ஒருவேளை குடும்பம், வேலை, அயலார், சகோதரர்கள் பொருத்தமட்டில் நமது சூழ்நிலை அதிக வெறுப்பூட்டுவதாக நாம் காண்கிறோமா? அல்லது நாம் ஆவலுடன் அடையவிரும்புகிற ஊழியத்திற்கான சிலாக்கியங்கள் அங்கே இருந்தும், அவை நமக்கு மறுக்கப்பட்டதால் நாம் மனக்குறைவடைந்திருக்கலாம். நாம் குறைகூறுகிறோம், மேலும், அடிக்கடி முறுமுறுக்கிற ஒருவனே ஏற்ற கால சத்தியத்துக்கு எதிராக கொழித்தல் வேலையில் ஈடுபடுகிறான். கிளர்ச்சி செய்பவர் அதிருப்தியாளர் என்ற பெயரைச் சம்பாதித்துக் கொண்டவர்களாக, நாம் நம்முடைய கிறிஸ்தவ நண்பர்களையும்கூட விரோதித்து, நம்மை தனித்து விடப்பட்டவர்களாக காண்கிறோம். எல்லா-வற்றையும்விட அதிக சீர்கேடான வகையில்,*

**தேவனுடைய சித்தத்தை அறிவது கடினமானதல்ல**

**நாம் கீழ்ப்படிய மனதுள்ளவர்களாயிருந்தால் அவர் வெளிப்படுத்த சித்தமுள்ளவராயிருக்கிறார்.**

*யோவா. 7 : 17. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவன் எவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான்.*

**அறிய விரும்புகிறவர்களுக்கு தேவன் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துவதில்லை.**

**தம்முடைய சித்தத்துக்கு கீழ்ப்படிய ஆயத்தமாயிருப்பவர்களுக்கே அதனை வெளிப்படுத்துகிறார்.**

தேவனுடைய உண்மையுள்ள ஜனங்களின் சுதந்திரமாகிய இருதயம் மற்றும் மனதின் இளைப்பாறுதலை நாம் இழந்து விடுகிறோம். "**பின்னும் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று அவர் யாரைக் குறித்து ஆணையிட்டார்? கீழ்ப்படியாதவர்களைக் குறித்தல்லவா?**" (எபி. 3 : 18). சீர்படுத்த முடியாத அதிருப்திமிக்கவர்களாக நாம் இருப்போமானால், அடுத்து நம்முடைய நன்றியற்ற தன்மையால் (விழுந்து போன மனுக்குலத்தைச் சூழ்ந்துள்ள மிக மோசமான குற்றம்) நாமும்கூட மிகுந்த மனக்கசப்புக்குள்ளாகிறோம்.

இருதயத்தின் சரியான போக்கு, தேவனுடைய திட்டத்தை ஞானமுள்ளதாக மட்டுமல்ல, நம்முடைய சொந்த திட்டத்தைவிட அதிக நீதியுள்ளதாக ஏற்றுக் கொள்ளுவதே இருதயத்தின் சரியான குணப்பண்பாக இருக்க வேண்டும். அதன் பலனாக, நிகழ்கால சத்தியத்தின் வெளிச்சத்தை அனுபவித்தவர்கள் எவரேனும் கர்த்தரால் கைவிடப்பட்டு, புறம்பான இருளுக்குள்ளாக கொண்டுவிடப்பட்டதை நாம் காணும்போது, அப்படிப்பட்டவர்கள் கைவிடப்படுவதற்கு முன்பு அவர்களிடம் ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசம் நிறைந்த பொல்லாத இருதயம் இருந்திருக்கிறது என்று நாம் தீர்மானிக்க வேண்டும். வாக்குத்தத்தம் செய்தவர் உண்மையுள்ளவராயிருக்கிறார், "**அவருடைய** (பிதாவினுடைய) **சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ, அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்வான்.**" (யோவா. 7 : 17). எனவே கிறிஸ்துவின் உபதேசங்களை ஒரு சமயம் பெற்றுக் கொண்டு, பின்பு அவைகளை இழந்து விடுகிற எவனும், கொழித்தல்காரனாக ஆவதுடன் அவன் தன்னுடைய புத்தியில் அறிவில் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டவனை விட நிச்சயமாக அதிகக் கேடடைவான். அவனுடைய இருதயம் முன்னதாகவே கர்த்தரிடத்திலிருந்து பிரிக்கப்பட்டு இருந்திருக்க வேண்டும்; ஏனெனில் நாம் அவரில் நிலைத்திருக்கும் வரை, இந்த "**தீங்கு நாளின்**" இந்த "**சோதனை காலத்தின்**" எந்த கண்ணிகளும் நம்மை சிக்கவைப்பது கூடாத காரியமாயிருக்கும்; நம்மை பிதாவின் கையிலிருந்து பறித்துக் கொள்ள ஒருவனாலும் கூடாது; அவர் நம்மை முழுமையாக காத்துக் கொள்ளக்கூடியவராயிருக்கிறார். பிதாவானவர் அப்படிப்பட்ட கனிகொடாத கிளைகளை மெய்யான திராட்சைச் செடியிலிருந்து வெட்டிப் போடும்போது, தேவனுடைய செய்கைகளுக்கு நாம் எதிர்த்து நிற்காமலிருப்போமாக. அவர் துண்டித்துப் போடுகிறவர்களுக்காக நாம் நம்முடைய தலைமூடல்களை எடுத்துப்போடவும் அல்லது அழுது புலம்பவும் கூடாது! தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் நீதியானவை தனிநபரைப் பொறுத்தவரையில் ஒரு காலத்தில் நிகழ்கால சத்தியத்தின் வெளிச்சத்தை அனுபவித்த ஒருவர், நன்றியற்ற தன்மை மற்றும் முறுமுறுத்தல் ஆகியவற்றின் மூலம், தனது குணாதிசயத்தை மிகுதியான அளவில் கெடுத்து கேடடையச் செய்யக்கூடும்; அப்படி தனது குணாதிசயத்தை மிகுதியான அளவில் கெடுத்து கேடடையச் செய்வதால், சிலருடைய காரியங்களில் ஆயிர வருட ஏற்பாடுகளாலும், அதனைச் சரிசெய்ய முடியாது. (E-16, p 175; PT 1977 p 91; PT 1980 p 62; R 1424).

அப்போஸ்தலன் பவுல், பிலிப்பு பட்டணத்தைச் சேர்ந்த சகோதரர்களை தன்னுடைய மனதிற்கொண்டு, அவர்களுடைய தொடர்ச்சியான சமாதானம் மற்றும் இசைவை வாஞ்சித்து, "எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமல் செய்யுங்கள்" என்று அவர்களுக்கு புத்திமதி சொல்வது மிகுந்த அவசியமானதென்று எண்ணியதில் ஆச்சரியமில்லை. "**பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன் ......... நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்.**" (யோவா. 15 : 9, 17). நம்முடைய கர்த்தரைப் போலவே, நாமும் சமாதானம் பண்ணுகிறவர்களாக "**சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்**" (எபே. 4 : 3). எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமல் செய்யும்போது, "**இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது**" (சங். 133 : 1) என்பதை நாம் கண்டு கொள்வோம்.

பரி. பவுலும்கூட உபத்திரவங்களை அனுபவித்தார். "**ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன் .... நிர்ப்பந்தமான மனுஷன் நான்!**" (ரோம. 7 : 19, 24) என்று சொன்னார். குணாதிசய குறைபாடுகளை மேற்கொள்ள பெருமுயற்சிகள் செய்ய நம்மைத் தூண்டுவதில் இவ்விதமான அதிருப்தியானது ஆரோக்கியமான விளைவை ஏற்படுத்தும். நிச்சயமாகவே, பவுல், தன்னுடைய ஜீவியத்தின் முடிவு காலத்தில் அதிக நிச்சயத்துடன் "**நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன், இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்**" (2 தீமோ. 4 : 7, 8) என்று சொல்ல முடிந்தது.

ரசல் போதகர் 104 வருடங்களுக்கு முன்பு "இந்த யுகத்தின் முடிவில், ஆசாரியன் மற்றும் லேவியர்கள் சம்பந்தமான காரியங்கள் சீரமைக்கப்படும் என்றும் (R 4745) அத்துடன் அதில் "**ஆசாரியர்கள் மட்டுமே பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பார்கள்: லேவியர்களோ பிரகாரத்தில் இருப்பர்கள்**" என்றும் எழுதியிருக்கிறார். வேத வாக்கியங்களின் போதனைகளுக்கு இசைவாக, "உண்மையும், விவேகமுமுள்ள ஊழியக்காரனால்" தெளிவாக விளக்கப்பட்டபடி, எபிபெனியால் பிரகாசிப்பிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்த கர்த்தருடைய ஜனங்கள் எபிபெனியின்போது, "இந்த யுகத்தின் முடிவில்," கர்த்தருடைய "காரியங்களின் சீரமைத்தலுக்கு" உண்மையுடன் இசைந்திருப்பார்கள். "யுகமாறுதல்

> மற்றவர்களுக்காக சுயவெறுப்பு ரோம. 15 : 1-7
>
> கர்த்தாவே உம்மை நோக்கிச் சுட்டிக்காட்டக் கூடிய நண்பர்கள் மற்றும் முதிர்ந்தவர்கள் என்னையும் என் பிள்ளைகளையும் தயை கூர்ந்து சூழ்ந்திருக்கச் செய்யும்.

வேதனை நிறைந்ததாயிருக்கலாம், இருந்தாலும் அது ஆசீர்வாதமானதாயிருக்கும், சாத்தானுடைய சாம்ராஜ்யமும், பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையும் கவிழ்த்துப் போடப்படுவதையும், மேசியாவின் ராஜ்யமும், நீதி மற்றும் நித்திய ஜீவனுக்கான ஆளுகையும் தொடங்கி வைக்கப்படுவதையும் குறிப்பிடுவதாக இருக்கும்" *(E-4, p 48)* என்று இந்த எபிபெனியாகிய உபத்திரவ காலத்தின் யுகமாறுதலைப் பற்றி ரசல் போதகர் கூறியிருக்கிறார்.

எபிபெனியால் பிரகாசிப்பிக்கப்பட்ட உண்மையுள்ள சகோதரர்கள், கர்த்தர் தம்முடைய வார்த்தை மற்றும் பரிபாலன நடத்துதல்கள் மூலமாகவும் அவர்களுக்கு வெளிப்படுத்தி அவர்களை அழைத்துக் கொண்டு வந்திருக்கிற இந்த மாற்றங்களுக்கும், சீரமைப்புகளுக்கும் தங்களை இணங்கி இருக்கும்படி செய்திருக்கிறார்கள்; அது இன்றுவரை தொடர்ந்து நிகழ்கிறது. மேலும் இப்போது (2015), 1954 இலையுதிர் காலத்திலிருந்தே தங்களை பிரதிஷ்டை செய்திருக்கிற சகோதரர்கள் அதிகமதிகமான பேர், பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்களாக பாளையத்தில் தங்கள் ஸ்தானத்தைப் பெற்றிருக்கின்றனர். சத்தியத்தில் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்கள், மிக உயர்ந்த நிறைவேறுதலான நிதனீமியர் வகுப்பாராயிருக்கிறார்கள்; அவர்கள் நிறைவேறுதலான லேவியர்களாகிய பிரகாரத்திலிருக்கிற வாலிபரான பாத்திரவான்களான தங்களுடைய சகோதரருடன் ஏற்றவாறு இணக்கமாக ஒத்துணர்வோடு ஊழியஞ் செய்கின்றனர். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் வாலிபரான பாத்திரவான்களான அந்த சகோதரருடன் மிகவும் நெருக்கமான தொடர்பிலிருக்கிறார்கள்; அவர்கள் இருவருமே நிறைவேறுதலான ஒன்றேயான மனாசே கோத்திரத்தாராயிருக்கிறார்கள்.

எனதருமை பிரதிஷ்டை செய்த சகோதரரே; பாவமானது (உச்சத்தை நோக்கி) அதிகரித்துக் கொண்டிருக்கிறதான இந்த வேளையில் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்கள் மரணத்துக்கான பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். எனவே பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர் இடுக்கமான வாசலுக்குள்ளாக பிரவேசித்து, நெருக்கமான வழியில் நடக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் சுயத்திற்கும் உலகத்துக்கும் மரித்து, சுற்றியுள்ள பாவங்கள் மற்றும் எதிர்ப்புகள் மத்தியில் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்கள். ஆம், அவர்கள் அநேக விதங்களில் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் நிலைக்கு மிக அருகில் வருகின்றனர். இப்படிப்பட்ட மிகப்பெரிய சிலாக்கியங்களுடன், அவர்கள் தங்கள் அழைப்புக்கு உண்மையுள்ளவர்களாயிருப்பதை நிரூபிக்க வேண்டிய மிகப் பெரிய சோதனைகளும்கூட வருகின்றன. ஆயினும் அவர்கள் துணிகரமாக விழுவார்களேயானால், அவர்களுடைய தவறான செயல்களுக்காக மிகவும் கடுமையான தண்டனையின் கீழ் அவர்கள் வருவார்கள்! பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்களே உன்ன. *6 : 8*-ல் சொல்லப்பட்டுள்ள "**தொகையில்லாத கன்னிகையராக**" இருக்கிறார்கள்; அவர்கள் சாலொமோனுடன் திருமண பந்தத்தில் இல்லாவிடினும், நெருக்கமான சம்பந்தமுள்ளவராக இருந்தார்கள். ஓ, பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்கள், தேவனால் தாவீதின் மூலமாக லேவியருக்கு ஊழியஞ் செய்யும் பொறுப்பான பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். "**தாவீதும், பிரபுக்களும் லேவியருக்குப் பணிவிடைக்காரராக நிதனீமியரை நியமித்தனர்**" என்று எஸ்றா *8 : 20*-ல் கூறப்பட்டுள்ளது. ஆம், (யுகமாறுதலின்) மாற்றங்கள் நிறைந்த காலத்தில், பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்களாகும் நம்பிக்கையுள்ளவர்களுக்கு அதிகமதிகமான உராய்வுகள், பிரச்சனைகள் ஏற்படுகின்றன. எனவே நாம் முறுமுறுப்புடன் முரண்படுதல், நன்றியில்லாமை ஆகியவற்றை ஒதுக்கித் தள்ளிவிட்டு, பவுல் அப்போஸ்தலரைப் போல ஜெயங்கொள்ளும்படியாக ஓடுவோமாக! ***

## திருச்சி LHMM கன்வென்ஷன் (மே மாதம் 7, 8 – 2016)

**இந்த கன்வென்ஷனில் உற்சாகமாய் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொள்ளும்படியாக கர்த்தருக்குள் அன்பான சத்திய சகோதர, சகோதரிகள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**
**தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக. எபி. 10 : 24, 25: சங். 33 : 21.**

Visit us at : **www.biblestandardindia.com**


***For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :***

**Bro. V. Vincent Jeyakumar**

**Laymen's Home Missionary Movement**

#11/119-3, Near Water tank, South Street, Mukuperi - 628 616
(Near Nazareth), Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629



**FOR PRIVATE CIRCULATION ONLY**